பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 யாழ்ப்பாணம் | கார்த்திகை 10 செவ்வாய்க்கிழமை | முஹர்ரம் 16 | இதழ் 286 25 - 11 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-11-25
PERIODICALS DIVISION
LIBRARY

## திருமதி ரங்கநாயகி இன்று பதவி ஏற்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் வரவு—செலவுத் திட்டம்மீதான குழுநிலை விவாதம் இன்று ஆரம்பமாகிறது. இவ்விவாதத்தின் போது ஒவ்வோர் அமைச்சுக்கமான நிதி ஒதுக்கீடுபற்றி தனித்தனியாக விவாதிக்கப்படும். சனி, ஞாயிறு தினங்கள் தவிர டிசம்பர் 19ந் தேதிவரை தினசரி இவ்விவாதம் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும். 19ம் தேதி இரவு 8 மணிக்கு மூன்றும் வாசிப்பின்மீதான வாக்கெடுப்பு நடைபெறும்.

இன்றுகாலை 10 மணிக்கு

8-ம் பக்கம் பார்க்க)

# தென் இத்தாலியில் பூகம்பம்:

# 400 பேர் பலி!

## பலகிராமங்கள் முற்றாக அழிவு

### புராதன தேவாலயம் தரைமட்டமானது!

ரோம், நவம்பர் 24

தெற்கு இத்தாலியில் நேற்று ஏற்பட்ட பூகம்பத்தில் நானூறுக்குமதிகமானோர் மாண்டுபோயினர். நூற்றுக்குமதிகமானோர் பலத்த காயமடைந்துள்ளனர். நூற்றிஐம்பதாண்டுகளுக்கு முற்பட்ட புராதன தேவாலயமொன்றும் பூகம்பத்தினால் தரைமட்டமாகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு கடுமையாகப் பாதிக்கப்பட்ட தென்இத்தாலியின் ஒருபகுதியான பல்கோனாவில், இன்று காலை மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. நேற்று ஏற்பட்ட பூகம்பத்தினால் மாண்டவர்கள்தொகை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. பல கிராமங்கள் முற்றாக அழிந்துபோயின.

அடுக்குமாடிக் கட்டிடங்களும் பல வீடுகளும் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. பல நகரங்களில் பூகம்பத்தின் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களுடனுமான தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இத்தாலியில் கடந்த சில வருடங்களுக்குள் ஏற்பட்ட பூகம்பங்களில் இதுகடுமையானதெனக் கருதப்படுகிறது.

இடிபாடுகளுக்கிடையில் இன்னும் பலர் சிக்குண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. மீட்புவேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

(முன்வந்த செய்தி 3-ம் பக்கத்தல்.)

## இ.த.ஆசிரியர் சங்க யாழ்.கிளை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''வேலைநிறுத்தம் காரணமாக யாழ் கல்வித்திணைக்களத்தில் தேங்கிக்கிடக்கும் வேலைகளை யாழ் கல்வித்திணைக்களம், ஆசிரியர்களை அழைத்துச் செய்விக்கமுயற்சிப்பதாக அறிகின்றோம். இது உண்மையானால்; ஒரு தொழிற்சங்கமென்ற ரீதியில் எமது சங்க அங்கத்தவர்களின் அழைப்பை ஏற்று, கல்வித்திணைக்களத்திற்குச் சென்று வேலைசெய்வதை நாம் விரும்பவில்லை என்பதை எமது அங்கத்தவர்களுக்குத் தெரியத்தருகின்றோம்''

இவ்வாறு இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்க யாழ் மாவட்டக் கிளைவெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சங்கப்பணிமனையில் உபதலைவர் திரு. க. சின்னையா தலைமையில் யாழ் மாவட்டக் கிளைநேற்றுமாலை நடத்தியகூட்டத்தில் மேற்படி விஷயமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

## சீன பத்திரிகையாளர் குழு யாழ் விஜயம்

### ''ஈழநாடு'' பற்றி அறிவதில் கூடுதல்ஆர்வம் காட்டினர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம்செய்துள்ள சீனப் பத்திரிகையாளர் குழுவுக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைப் பத்திரிகை நிருபர்களுக்குமிடையே ஒரு சந்திப்பு நேறறுமாலை யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் இச் சந்திப்பு நடைபெற்றது.

சீன மக்கள் தினசரி பிரதி ஆசிரியர் திரு. டிஙஜிங்கன் தலைமையில் சீனுவிலிருந்து இங்கு வந்துள்ள குவாங்மின் தினசரியின் கல்வித்துறைப் பிரதி இயக்குனர் திரு. மீய் ஷாணிப், சீன மக்கள் தினசரியின் சிரேஷ்ட நிருபர் திரு. சென்யோ சின், பீஜிங்தினசரி வெளிநாட்டுச்செய்தி ஆசிரியர் திரு. ஆசென் செங், சீனமக்கள் தினசரி நிருபர் திரு ஹோஆயுவான் ஆகியோருடன்; ''வீரகேசரி'' பத்திரிகையின் யாழ் நிருபர் திரு எஸ் செல்லத்துரை, ''தினபதி'' பத்திரிகையின் யாழ் நிருபர் திரு கே. அரசரத்தினம், ''ஈழநாடு'' பத்திரிகையின் நிருபர் திரு ரி எஸ். தர்மலிங்கம், ''தினகரன்'' யாழ் பிரதேச நிருபர் திரு. செல்வராசா, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. காசிநவரத்தினம் ஆகியோருடன் யாழ் செயலகத்தைச் சேர்ந்த மேலதிக அரசாங்க அதிபர்களான திரு.எம். பஞ்சலிங்கம், திரு. எஸ் தர்மபாலன், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ் சண்முகசுந்தரம் திட்டமிடல் பகுதி அதிகாரி திரு எஸ். புவனேந்திரன். அரசாங்க அதிபரின் செயலாளர் திரு. என் நாகரத்தினம், வட பிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து

(8ம் பக்கம் பார்க்க)

### நாளை அன்ரன் கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் சார்ஜன் அன்ரன் கொலைவழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜேசுநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நாளைக்கு தவணைரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## இளவரசர் சார்ள்ஸ் இந்திய இளவரசியை மணப்பாரா?

புதுடில்லி, நவ 24

இந்தியாவில் ? வார சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் இந்தியாவிலே தமது எதிர்கால மனைவி ஒருவரைத் தெரிவு செய்வார் என இந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய அழகிய இளவரசி ஒருவரையே இவர் மணந்துகொள்வார் என்றும் அப்பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

இதே வேளையில் இளவரசர் செல்வி டியானு ஸ்பென்சர் சீமாட்டியை திருமணம் செய்வார் என்றும் இவர்கள் இருவருக்கும் சில நாட்களாக காதல் தொடர்பு இருந்து வருவதாகவும் பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இளவரசர் சார்ள்ஸ் தமது திருமணம் பற்றி நத்தார் பண்டிகைக்கு முன்னர் அறிவிப்பார் என்றும் அப்பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. (இ)

### புதுச்சேரி சட்டசபை

## தி. மு. க. ராமலிங்கம் அ.தி.மு.க.வில் சேர்ந்தார்

சென்னை, நவ. 24

புதுச்சேரி (பாண்டிச்சேரி) சட்டசபையின் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு பி இராமலிங்கம் தி. மு கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்து அனைத்திந்திய அ. தி. மு. கழகத்தில் சேர்ந்து கொண்டார்.

சென்னையில் நேற்று அ இ. அ.தி. மு.க கட்சியின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான திரு. எம் ஜி ராமச்சந்திரன் முன்னிலையில் அ. இ. அ தி.மு.க. கட்சியில் திரு பி. இராமலிங்கம் சேர்ந்துகொண்டார். வெ)

## கடத்தப்பட்ட பீடிஇலைகள் யாழ்.நகரில் சிக்கின!

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவிலிருந்து 60 மூடை பீடி இலைகள் யாழ் நகருக்குள் கடத்திவரப்பட்டதாகக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சுங்கஅதிகாரிகளான திரு இராசரத்தினம். திரு. ம. அசோகன் ஆகியோரைக் கொண்ட கோஷ்டி யாழ் நாவலர் வீதியிலுள்ள வீடொன்றை சோதனையிட்டு, அங்கிருந்து சுமார் 20,000 ரூபா பெறுமதியான பீடி இலைகளைக் கைப்பற்றியது.

இக் கடத்தலுக்கு உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் காரொன்றும் சுங்கப்பகுதியினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணையை யாழ் உதவி சுங்க கலெக்டர் திரு எஸ். எம். ஜே. சேனரத்ன நாளை மேற்கொள்ளுவார்.

### சிகரெட்வான் கொள்ளை:

## சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்பட்டனர்

[வவனியா]

அண்மையில் பறையனாளங்குளத்தில் வைத்து சிகரட் வான் ஒன்றை வழிமறித்து 15,000 ரூபா கொள்ளையடித்தது சம்பந்தமாக சந்தேகநபர்களை வான் சாரதி, விற்பனவு பிரதிநிதி ஆகிய இருவரும் அடையாள அணிவகுப்பின்போது அடையாளம்காட்டினர்.

வவனியா மாட்டநீதிமன்றத்தில் பதில்நீதவான் திரு. பி என். ரெஜினுல்ட் முன்னிலையில் நடைபெற்ற அணிவகுப்பின்போது சந்தேகநபர்களான சுப்பிரமணியம் ஸ்ரீசங்கர் அல்லது மாடசங்கர், நகுலேந்திரன், குகதாசன், சங்கர் ஆகிய நால்வரையும் வான் சாரதி ஸ்ரீஸ்கந்தராஜா, விற்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

இங்கிலாந்தில் முற்றாக மறுசீரமைக்கப்பட்ட மொறிஸ் 1000 கார் என்ஜின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும், பார்வையிடவும்: 14, சீனியர் ஒழுங்கை, தட்டாதெரு, யாழ்ப்பாணம். 7412

3 யேசி மாடுகள் பாலுடன் உண்டு. ஆனந்தன் இல்லம், வல்வெட்டித்துறை. 7430

1 மவோகினி மரம், 1 மலை வேப்பமரம், 2 வேப்பை மரம். திருமதி தருமலிங்கம், புதுச் செம்மணி வீதி, ...லார் வடக்கு, 7428

EY 4467 இலக்கமுடைய சோமசேற் கார் விற்பனைக்கு உண்டு. பார்வையிட 28-11-80-க்கு முன். விபரங்களுக்கு: க. க. யர் கண்டு, சின்னுவடி, தங்கோடை, காரைநகர். 7429

யாழ்ப்பாணம் கந்தர்மடம், பெண்கள் மகளிர் கல்லூரி ஒழுங்கையிலிருந்து பலாலி றேட்டுக்கு 10 யார் தூரத்தில் அமைந்துள்ள 'கற்றுலாம் புலம்' என்னும் காணியின் விஸ்திரணம் நில. பர. 2 குளி 14½. த. சண்முகராசா சட்டத்தரணி மூலம் (கோண்டாவில்) தொடர்புகொள்ளவும். 7427

இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அண்ணுபாம், இணுவில். 7402

## 31-ம் நாள் நினைவாஞ்சலி



திரு. மத்தியாஸ் றெமீசியார்
[ஆசிரியர்]
தோற்றம்: 1-10-1925
மறைவு: 27-10-1980

''கொஞ்சிடும் மொழி
கேட்டு மகிழ்ந்தவர்
எங்கே
குலத்தின் விளக்காய்
திகழ்ந்தவர் எங்கே''

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக (26-11-80) புதன்கிழமை காலை 6-15 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் ஆன்மசாந்திக்காக அனைவரையும் வேண்டிக்கொள்ளும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், சகோதரர், மருமக்கள், பேரமக்கள்.
கடற்கரை வீதி,
பருத்தித்துறை. (7424)

# சதுரங்கப் போட்டியில் யாழ். இந்து அபார சாதனை

(யாழ்ப்பாணம்)

சென்ற் தோமஸ் கல்லூரியில் அண்மையில் நடைபெற்று முடிந்த சதுரங்கப் போட்டிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சிரேஷ்ட பிரிவைச் சேர்ந்த கே. சங்கர் வெளியூர் ஆட்டக்காரரில் முதலாமிடத்தையும் முக்கிய போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பினையும் பெற்றது ஒரு அபூர்வசாதனையாகும். சென்ற ஆண்டுச் சாம்பியன் அத்துறு பாரூவுடன் வெற்றிதோல்வியின்றி விளையாடியமையும் இவ்வாண்டு தோல்வியேயடையாமலும் விளையாடியமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது இதே குழுவைச்சேர்ந்த எம். நிர்மலனும் பிரதான போட்டியில் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிராந்திய போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற யாழ்ப்பாணம் இந்து கனிஷ்ட, சிரேஷ்ட குழுக்களும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பரியோவான் கல்லூரியும் தேசியரீதியில் இறுதிப்போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கனிஷ்டபிரிவு இலங்கையில் இரண்டாமிடத்தையும் வெளியூர்க்குழுக்களில் முதலாம் இடத்தையும் பெற்றது. இக்குழுவைச்சேர்ந்த ஜி. வசந்தகுமார் தோல்வியடையவில்லையென்பதும் ஏ. அருணகிரிநாதன் ''குருக்ஷேத்திர''ப் (மேசைப்) பரிசையும் பெற்றுரென்பதும் சதுரங்கப் பிரியரின் கவனத்தை ஈர்த்தது.

சிரேஷ்ட பிரிவு இலங்கையில் ஆறும் இடத்தைப்பெற்றதாயினும் அக்குழுவின் கே. சங்கரினதும் எம். நிர்மலனினதும் சாதனைகள் பிரமிப்பூட்டுவன. (ஈ)

## உடன் விற்பனைக்கு

40 சிந்தி வடக்கன் இன பசுக்கள் கலப்பு இனம், ஊசி ஏற்றப்பட்டவை. இனப்பெருக்கத்துக்கு உகந்தவை. முழுவதுமாக அல்லது பத்துப்பத்தாக வாங்கலாம். உத்தேச விலையுடன் விண்ணப்பிக்கவும். பண்ணையைக் குறைக்கும் முகமாக விற்கப்படுகின்றது.

பாலகிருஷ்ணன்,
(7423) அருள்மலை, தனியூற்று, முள்ளியவளை.

## நகராட்சி மன்றம், சாவகச்சேரி

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1981

பின்வரும் விடயங்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், ஆகியோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1981''** எனக்குறிப்பிட்டு ஒவ்வொருவிடயத்திற்கும்நேரேகுறிப்பிடப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்துடன் இதன்கீழ் கையொப்பமிட்டுள்ளவருக்கு **10-12-1980 முற்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும்.**

| | விடயங்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. | எழுதுகருவி வகைகள் | ரூபா 25/- |
| 02. | அலுவலக உபகரணங்கள் | 25/- |
| 03. | தளபாடங்கள் | 25/- |
| 04. | கோலவுடைகளும், கோலவுடைக்கான பொருட்களும் | 25/- |
| 05. | அச்சிடுதல் | 25/- |
| 06. | மின்சேவை இணைப்புகள், விநியோகக்கம்பிகள், தெருவிளக்கேற்றல் முதலியவற்றுக்கான மின்பொருட்கள் | 50/- |
| 07. | மலகூட, சோட்டி வேலைக் களஞ்சியப் பொருட்கள், மலகூட வாளிகள், தும்புத்தடிகள், ஈர்க்குக்கட்டுகள், கிருமிநாசினிகள் முதலியன | 25/- |
| 08. | வாடிவீட்டுப் பொருட்கள், சமையல் அறைத் தளபாடங்கள், துணிவகைகள், பீங்கான் வகைகள் | 25/- |
| 09. | வீதி வேலைகளுக்கான கிரவல், மக்கி, கல், தார் முதலியன | 25/- |
| 10. | தச்சு வேலைக்கான மரங்கள், பலகைகள் மற்றும் உபகரணங்கள் | 25/- |
| 11. | இரும்புப் பொருட்கள் | 25/- |

## சேவைகள்

| | | |
|---|---|---|
| 1. | கட்டிடங்களைப் பழுது பார்த்தலும், பேணலும் | 25/- |
| 2. | தளபாடங்கள், உபகரணங்கள் முதலியன பாதுகாத்தல் | 25/- |
| 3. | தெருக்கள், மதகுகளைப் பழுது பார்த்தலும், பேணலும் | 25/- |
| 4. | கட்டிடங்கள் அமைத்தல் | 25/- |
| 5. | கூட்டல் இயந்திரம், தட்டச்சு இயந்திரம் பழுதுபார்த்தல் | 25/- |

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் திரவிலிருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணப்படும் பட்சத்தில் வேறு வழங்குநர்களிடமிருந்து விலைகள் கோரி கொள்வனவு செய்யும் உரிமை மன்றத்திற்கு உண்டு. வேண்டப்படும்போது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவாணை விடுக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட மாதிரிகளுக்கு அமையாதனவாயிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

எஸ். கே. திரவியநாயகம்,
தலைவர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்ற
அலுவலகம்,
சாவகச்சேரி,
18-11-1980. (7425)

# கோழிகளைத் திருடினராம்

## டிச. 5 வரை றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவு வேளையில் கோழி திருடி பொலிசாரிடம் அகப்பட்ட சில்லாலை வாசி ஒருவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிபதி அவரை அடுத்த மாதம் 5ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். இரவு வேளை பண்டத்தரிப்புப் பகுதியில் ரோந்துசுற்றும் சேவையில் ஈடுபட்ட சங்கானைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் திரு. விஜயவீரா, திரு தர்மலிங்கம் ஆகியோர் வீதியால் பை ஒன்றுடன்வந்து கொண்டிருந்த நபர் ஒருவரை சந்தேகத்தின்பேரில் மறித்து விசாரணை செய்தபோது அவரிடம் களவாடப்பட்ட கோழிகள் இருக்கக் காணப்பட்டனவாம். சங்கானை மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லர் நாகம்மா என்பவரின் கோழிகளை இவ்வாறு திருடப்பட்டதாக விசாரணையில் தெரியவந்ததை அடுத்து பிரஸ்தாப நபரான சில்லாலையைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை மரியதாஸ் என்பவரை சங்கானைப் பொலிசார் மல்லாகம் மாவட்டநீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது நீதிபதி திரு, சி. ஆர். இராசசிங்கம் அவரை எதிர்வரும் 5ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார், (இ)

## உதைபந்தாட்ட....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் நடைபெற்ற போட்டிகளிலும் வெற்றிபெற்ற கல்லூரிகள் தமக்குச் சாதகமாகக் கிடைத்த ஒரு கோலும் பனல்டி உதை மூலமே பெறப்பட்டது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (பலாலி நி.ஈ)

## விளம்பரம்

தெல்லிப்பழை ப. நோ கூ. சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன

1. வெற்றுச்சாக்கு- 8600.

### கழிவுப் பொருட்கள்

சீனி -144 கிலோ
மா -421 கிலோ
45 கலன் பழுதடைந்த வெற்றுத் தகரம்- 100

கேள்விப்பத்திரம் ரூபா 250/- செலுத்தி சங்கத்தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் 80-11-28-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல்வேண்டும். தபாலுறையின் இடது பக்கத்தில் 'வெற்றுச்சாக்கு கழிவு பொருள் கேள்விப்பத்திரம்' எனக்குறிக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
980-11-25.
தெல்லிப்பழை. 7426

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 10-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(25-11-80)

மேடம்: பணநிலைமை ஸ்திரமாக இருக்கும். புதியவழிகளிலும் பொருள்வரவிற்கும் இடமுண்டு. பெற்றோரின் அன்பு அவசியம் கிடைக்கும். சினிமாத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்குச் சிறப்பான நாள்.

இடபம்: நெருக்கடியான சூழ்நிலை உருவாகும். சிலர் கடன் தொல்லையால் பாதிக்கப்படுவர். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். கூட்டு வியாபாரத்தில் சிக்கல்கள் தோன்றலாம்.

மிதுனம்; விரக்திநிலை உருவாகும். வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். உடல்நிலை சிறிது பாதிக்கப்படலாம். சுகாதாரம் நன்று.

கடகம்; எழுத்தாளர்களுக்கு இன்று எழுச்சிமிக்க தினம். நண்பர்களின ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். மாணவர்களுக்கு இன்று சிறப்பான தினமாகும்.

சிங்கம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம்பெறும். நெருங்கிய உறவினர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடும். எதிலும் நிதானம் வேண்டும்.

கன்னி: ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள். பெற்றோருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தாய்வழியால் நற்செய்தியும் வந்து சேரும் எதிர்பாராத விருந்திற்கும் இடமுண்டு.

துலாம்: நீண்டநாள்களின் பின் இன்றுநிறைவான தினம். எதிர்பார்த்த பொருள் கைவந்துசேரும். சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும். பரவசம் ஊட்டும் தினம்.

விருட்சிகம்: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலைவாரிவிடக்கூடும். சிலருக்கு அன்னியவாசமும் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்கள் ஆவதானம் வேண்டும்.

தனுசு: குடும்பம் இன்று கலைக்கோவிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும். களஸ்திர ஸ்ரீயால் லாபமும் கிடைக்கும். வாழ்க்கையில் பசுமை தோன்றும்.

மகரம்: சூழ்ச்சிவலை பின்னும். அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர், கடன்பட நேரிடலாம். மன அடக்கம் வேண்டும்.

கும்பம்: உள்ளப் படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவமுன்வருவார்கள். பிதாவழியால் நன்மைகள் வந்துசேரும். இன்று சிறப்பான தினமாகும்.

மீனம்; தொழிலில் வெற்றி கிடைக்கும் விருந்தினர்கள் வருகையால் வேடிக்கை பல நிகழும். போக்கு வரத்துச் சுகமும் உண்டு. இன்று சுகநாளாகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# மக்கள் கடை வியாபாரம்

(அரியாலை)

விற்பனைத் திணைக்களத்தால் வடபகுதியில் நடாத்தப்பட்டு வரும் மக்கள் கடைகளில் நாளாந்த விற்பனவு சமீபகாலமாக குறைந்து வருவதாகத் தெரிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் தினசரி வியாபாரத்தின் மூலம் ரூபா நாலாயிரம் வரையில் விற்பனை நடைபெற்ற யாழ். பெரிய கடைப் பகுதியிலுள்ள மக்கள்கடையில் சமீபகாலமாக நாளாந்த விற்பனவு பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

பாவனையாளர்களுக்கு வேண்டிய பொருட்கள் மிகவும் குறைவாகவே இக்கடைகளில் விற்பனைசெய்யப்படுவதாக மக்கள் குறைபட்டுக்கொள்கிருர்கள். (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்இத்தாலியில் பயங்கர பூகம்பம்! 200 பேர் பலி

ரோம், நவம்பர் 24

தெற்கு இத்தாலியில் நேற்று ஏற்பட்ட பூகம்பத்திற்கு 200 பேர் பலியானுர்கள் என்றும் நூற்றுக் கணக்கானேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

பல வீடுகளும் அடுக்குமாடிக் கட்டிடங்களும் இடிந்து விழுந்தன என்றும் இந்த இடிபாடுகளுக்குள் பல சடலங்கள் சிக்கியுள்ளதால் இந்த நில அதிர்வினல் பலியானேரின் தொகையை இன்னும் சரியாகக் கணக்கிட முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

நகரமொன்று முற்ருகச் சேதமடைந்துள்ளது. ரயில், வீதிப்போக்குவரத்துகள் தெற்கு இத்தாலியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப்பணிகளில் முப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ)

## ரயிலைத் தடுத்தனராம் 170 பேர் கைது

பம்பாய், நவ 24

மகராஷ்டிரத்தில் கிளர்ச்சி செய்துவரும் விவசாயிகள், பம்பாய் சென்ற கடுகதி ரயில் ஒன்றை பலாத்காரமாகத் தடுத்துவைத்திருந்ததை அடுத்து 170 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த ரயில், பிரயாணிகளுடன் ஒன்றரைமணி நேரம் தடுத்துவைக்கப்பட்டது. (இ)

அஸாம் பிரச்னே:

## எதிர்க்கட்சிகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும்

### வாஜ்பாய் கருத்து

நாக்பூர், நவ. 24

நாட்டின் குறிப்பிட்ட சில பிரச்னைகளில் மட்டும் பாரதீய ஜனதா கட்சி எதிர்க்கட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஒழிய எந்தக் கூட்டணியிலும் அது சேராது.

இவ்வாறு பாரதீய ஜனதா கட்சித் தலைவர் திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்தார்.

அஸாம் வெளியார் பிரச்னையைத் தீர்ப்பதில் உள்ள அரசியல் சாசன சிக்கல்களைச் சமாளிக்க அரசு எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்றும் திரு. வாஜ்பாய் நாக்பூரில் நிருபர்களிடம் பேசுகையில் கூறினுர். (இ)

## ஆண்டு விழா

(புலோலி)

பருத்தித்துறை, ஆத்தியடியைச்சேர்ந்த சமூகசேவையாளரான க. வேல்முருகுவின் 100 வது ஆண்டு விழா சென்ற செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது. இவரது நூருவது ஆண்டுவிழாவையொட்டி ஆத்தியடிப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைகளும், ஆராதனைகளும் இடம்பெற்றன. (ஈ)

# தலைவர்கள் காட்டியபாதையில் தமிழ்இனத்தை வழிநடத்திதமிழ்ஈழத்தை அடைந்தேதீருவோம்

## அமரர் 'திரு' நினைவு விழாவில் 'அமிர்' உரை

(யாழ்ப்பாணம்)

''திருமதி சிறிமா அம்மையாருடன் நான் ஒரே மேடையில் பேசியதால், நீங்கள் எந்தப் பக்கம்? இந்தப் பக்கமா? அந்தப் பக்கமா? என்று கேட்கிருர்கள்? நாங்கள் எங்கள் பக்கம். என்றும் தமிழ்மக்கள் பக்கம்தான். தலைவர்கள் காட்டிய பாதையில் தமிழ்மக்களை வழிநடத்திச் சென்று எப்படியாவது தமிழ் ஈழத்தை அடைந்தே திருவோம்.''

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த அமரர் திருச்செல்வம்நினைவுதினவிழாவில் பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

அமரர் திருச்செல்வம் உருவச்சிலைக்கு, யாழ். முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன், எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் மாலை சூட்டியபின், மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக வீரசிங்கம் மண்டபத்தை அடைந்தனர் இவ்விழாவில் திருமதி திருச்செல்வம், கலாநிதி நீலன் திருச்செல்வம், குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

திருச்செல்வம் பொதுப்பணி மன்றம் நடத்திய இவ்விழாவிற்கு யாழ்ப்பாணம் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் தலைமைதாங்கினு். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

திருச்செல்வம் பொதுப்பணி மன்றச் செயலாளர் தியாகி எஸ் எம். பாரதமுத்து திருச்செல்வம் உருவப்படத்திற்கு மாலைசூட்டினுர்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

### தமிழ் மக்கள் பக்கம்

மாவட்ட அபிவிருத்திச்சபைகளை ஆதரித்ததும், நீங்கள் யூ. என். பி பக்கமா? என்ருர்கள். ஒரே மேடையில் சிறிமா அம்மையாருடன் பேசியதும் நீங்கள் சுதந்திரக்கட்சி பக்கமா? என்கிருர்கள். நாங்கள் என்றும் தமிழ்மக்கள் பக்கம்தான். போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும். 33 வருடகால அரசியல் வாழ்வில் போதிய அனுபவம் உண்டு. அதனைக்கொண்டு தமிழ்மக்களைச் சரியானபாதையில் கொண்டுசென்று எங்கள் லட்சியத்தை அடைந்தே தீருவோம்.

அமரர் திருச்செல்வம், தந்தை செல்வாவிற்கு வாழ்நாள் முழுவதும் பக்கபலமாக நின்று ஆற்றியபணி மகத்தானது. அமரர் திருவுக்குப் பக்கதுணையாக நின்று, அவர் எடுத்த காரியத்தை முடித்து வைப்பதற்கு ஊக்கமும் உற்சாகமுமளித்த திருமதி திருச்செல்வத்திற்கு தமிழினம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழினத்திற்குத் தன்னலான பணியைச்செய்துவரும் அமரர் திருவின் மகன் கலாநிதி நீலன் திருச்செல்வத்திற்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**கா. யோகநாதன்**

### தமிழருக்காக வாழ்ந்தார்

அமரர் திருச்செல்வம் தமிழ் இனத்திற்காக வாழ்வை அர்ப்பணித்திராவிட்டால், பெரும் செல்வம்தேடி, பிரதம நீதியரசராக வந்து இளைப்பாறும்நிலை ஏற்பட்டிருக்கும், லட்சக்கணக்கில் பணம் சம்பாதித்திருப்பார். அவர் பட்டம் பதவிகளைத் துச்சமென மதித்து, தமிழ் மக்களுக்காகவே வாழ்ந்தார். அரச உயர்பதவிகளைத் தன் இனத்திற்காக உதறித் தள்ளினுர்.

57-ம் ஆண்டு பண்டா செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் அவர் சொலிசிற்றர் ஜெனரல் பதவி வகித்தார். அப்போதெல்லாம் இரவு நேரங்களில் தந்தை செல்வாவைச் சந்தித்து என்னென்ன கோரிக்கைகளை ஒப்பந்தத்தின்முன் வைக்கவேண்டும் என ஆலோசனை வழங்கினுர். ஒற்றர்கள் அறிந்தால் பதவி பறிபோய்விடும் என்று கூடக் கருதாமல் தமிழ் இனத்திற்காக உழைத்தார்.

### தூதராக வந்தார்

யாழ்ப்பாணம், மன்னுர், வவுனியா, மட்டக்களப்பு, திருமலை ஆகியமாவட்டக்கச்சேரிகளில் சத்தியாக்கிரகம் நடந்தது. நிதியமைச்சர் திரு பெர்ணுண்டோவுடன் அமரர் திருச்செல்வமும் வந்தார். தந்தையைச் சந்தித்து ...



பேச்சுவார்த்தை நடத்தவிரும்புகிறது சத்தியாக்கிரகம் நடந்துகொண்டிருக்கட்டும் பேச்சுவார்த்தை நடத்துங்கள்' என்று கேட்டார். அவரின் ஆலோசனையை ஏற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினேம்.

நீதிமன்றத்தில் தமிழ்மொழிக்கு எப்படியான இடமளிக்க வேண்டும் என்றெல்லாம் பேசினேம். உடன்பாடு காண முடியவில்லை. நாங்கள் திரும்பினேம். ஏப்ரல் 17-ம தேதி நள்ளிரவு அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவந்து கச்சேரி வாசலிலிருந்த எங்களை வெளியேற்றினுர்கள். பனுகொடை இராணுவ முகாமில் அடைத்தார்கள். அப்பொழுது அரசுக்கும் எங்களுக்குமிடையில் தூதுநின்ற அமரர் திருச்செல்வத்தையும் அங்கு தடுப்புக்காவலில் வைத்தார்கள். அவர் கதிகலங்கிவிடவில்லை. அமைதியாகவே காணப்பட்டார். ஆத்திரம் கொள்ளவில்லை. சாந்தமாகவே இருந்தார்.

### 65-ம ஆண்டு தேர்தலின்பின்

65-ம் ஆண்டு மார்ச்சில் தேர்தல் முடிந்தபின் அமரர் திருச்செல்வம் பெரும் பங்கெடுத்து ராஜசந்திரமுறையில் நடந்து கொண்டார். ஆதரவு அளிப்பதுபோல் நம்பச்செய்து சிறிமா அரசாங்கத்தை ராஜினுமாச் செய்யாமல் வைத்திருந்த அதேவேளையில் அமரர் டட்லியுடன் தந்தை செல்வாவைப் பேச்சுவார்த்தை நடாத்த ஏற்பாடு செய்தார் கடைசிவரை எதையும் வெளியிடாமல் டட்லி-செல்வா ஒப்பந்தமொன்றை உருவாக்கவழி செய்து பெரும்பான்மை உள்ளதற்கு ஆதரவு காட்டி டட்லியை ஆட்சி அமைக்கச் செய்தார். அதன்பின் டாக்டர் கொல்வின் மற்றும் பலர் அமரர் திருச்செல்வம் ஏமாற்றிவிட்டதாகக் குறைபட்டார்கள். டட்லி-செல்வா பேச்சு வார்த்தை நடந்து கொண்டி...

...சுக் கட்சியின் ஆதரவு கிடைக்கும் ஆட்சியை அமைக்கலாம் என சிறிமா அம்மையாரை நம்பச் செய்தவர் அமரர் திருச்செல்வம்தான். அன்று டட்லியுடன் பேச்சுவார்த்தை முறிந்திருந்தால் சிறிமாவுடன் ஒப்பந்தம் செய்யும் நிலை ஏற்பட்டிருக்கும். அப்படியான சூழ்நிலையில இருபக்கத்தையும் அமரர் திரு வைத்திருந்தார்.

### மாவட்ட சபை பொறுப்பு

தமிழ்பிரதேசத்தை ஓரளவு ஆட்சி செய்யக்கூடிய மாவட்ட சபைத்திட்டத்தை தயாரிக்கும் பொறுப்பை அமரர் திருச்செல்வமே ஏற்றுக் கொண்டார். பண்டா - செல்வா ஒப்பந்தம் 57ல் ஏற்படுத்தப்பட்ட ...சட்டம் தயாரிக்க ஏதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனுல் டட்லி-செல்வா ஒப்பநதமும் மாவட்ட சபை சட்டத்தை உருவாக்குவதற்காக அமரர் திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார். அவர் முயற்சி தமிழ் மக்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டிருந்ததால்கைகூடவில்லை.

சென்னையில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டபின் அமரர் திருச்செல்வமும் நானுஅவசரம் அவசரமாக மாவட்ட சபை மசோதாவிற்கு இறுதி முடிவும் கொடுக்க ஓடோடி இங்கு வந்தோம். டட்லியுடன் மாவட்ட சபை சரத்துகள் பற்றி பேசி இறுதி முடிவு எடுக்க வந்

(6-ம் பக்கம்பார்க்க)

# தமிழ் இனத்தின்தீர்க்கதரிசி அமரர் 'திரு'

## யாழ். 'எம். பி. யோகேஸ்'



(யாழ்ப்பாணம்)

தமிழ் இனம் பிளவுபட்டிருந்தால் எதிரிகள் இலகுவாகத் தாக்குவார்கள் என்று கருதி அமரர் திருச்செல்வம் பிளவுபட்ட தமிழ் தேசிய இனம் ஒன்றுபட வேண்டும் என விரும்பினுர்.

இவ்வாறு யாழ் எம். பி திரு. வி. யோகேஸ்வரன் நேற்றுமுன்தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அமரர் திருச்செல்வத்தின் நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### தமிழ்மக்கள் பாக்கியசாலிகள்

தமிழ் மக்கள் பாக்கியசாலிகள், சகல விதத்திலும் தலைசிறந்த தலைவர்கள் காலத்திற்குக்காலம் தோன்றித் தொண்டாற்றிவந்துள்ளார்கள். அப்படியான தலைவர்களில் அமரர் திருச்செல்வமும் ஒருவர். அவர் ஒரு சிறந்த சட்டமேதை. தமது திறமை அத்தனையையும் தமிழ் மக்களுக்காக குறிப்பாக இளைஞர்களுக்காகவே பயன்படுத்தினுர்.

கடைசி நேரத்தில் அவருடன் ஒரு தடவை கலந்துரையாடினேன். அப்போது சிறிமா ஆட்சி நடந்துகொண்டிருந்தது. 'இந்த அரசு அடுத்த முறை ஆட்சிக்கு வரமுடியாது' என்று அமரர் திருச்செல்வம் கூறினுர். யு. என். பி தான் ஆட்சிக்கு வரும் என்றும் அப்போதே அவர் கூறினுர். அவர் ஒரு தீர்க்கதரிசி.

ஒரு தலைவனுக்கு எப்படி விசுவாசமாக இருக்கவேண்டுமென்பதை, தன் வாழ்நாள் முழுவதும், தந்தையின் சிஷ்யனுக இருந்து எடுத்துக்காட்டினுர், பழகுவதற்கு இனியவர். அன்பே உருவானவர்.

### தனிநாடுபெற பாடுபட்டார்

யாழ் முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் கூறியதாவது.

தமிழ் தேசிய இனத்தின் இறைமை மீட்கப்பட்டுவிட்டதென்பதை 'ட்ரயல் அட்பார்' வழக்கில் உலகத்திற்கு எடுத்துக்காட்டினுர் அமரர் திருச்செல்வம். உலகில்வாழும்

( 7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுளின் சங்கல்பம் அல்லது இச்சையே இயற்கை நியதிகளாக வடிவெடுக்கின்றது.

—சுவாமி சிவானந்தர்

## நமது நோக்கு

### ஆங்கிலமும் உயர் கல்வியும்

வருகிற வருடம் பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவர் அனைவருக்கும் ஆறு வார ஆங்கில வகுப்பு தொடக்கத்திலேயே நடத்துவதற்குத் திட்டம் உருவாகிறது.

அரசாங்கத்தின் கல்விக் கொள்கை ஆங்கிலக் கல்வியின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு செயற்படுமெனத் தெரிகிறது.

ஆங்கிலக் கல்வியைப் பற்றி ஒரு மயக்கமான எண்ணம் மக்கள் மனத்தில் இருப்பதை நாம் காணமுடிகிறது.

முதலாந்தரம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரைக்கும் இலவசக் கல்வி என்ற கொள்கையை ஐ. தே. கட்சி அரசே முதன்முதலாகக் கொண்டுவந்து, அமுல்படுத்தியது. இன்று அது இலவச புத்தகங்களையும் சேர்த்து அந்தத்திட்டத்திற்கு முழுமை அளித்திருக்கிறது.

நாட்டில் நிகழ்ந்த, நிகழும் கேடுகளுக்கெல்லாம் இலவசக் கல்வியே காரணம் என்று கருதும் பணக்கார வர்க்கத்தினரும், பிற்போக்குவாதிகளும் இன்றும் எம்மத்தியில் இல்லாமலில்லை. பருவமழை பெய்யாத காலத்தில், இலவசக் கல்வியே அதற்குக் காரணம் என்று கூறியவரும் உண்டு.

இன்றுவரைக்கும் பல்லாயிரக்கணக்கான வறிய பிள்ளைகளுக்கு விமோசனம் வழங்கிய இலவசக் கல்வித் திட்டத்தை எந்த ஆட்சியும் அசைக்கமுடியவில்லை. அதே போன்று மாணவர்கள் தாய்மொழியிலே கல்வி கற்கவேண்டுமென்பது எந்த நாட்டுக் கல்வித்திட்டத்திலும் முதன்மையான கோட்பாடாகும். அடிமை நாடானால் அது வேறு விடயம்.

பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டிருந்த நாம், சுதந்திர நாடாகத் தலையெடுக்கத் தொடங்கியதும் எங்கள் கல்விமுறையைச் சீராக்கும் முகமாகவே தாய்மொழி மூலம் கல்விகற்க; கற்பிக்க முயன்று வந்தோம்.

பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம்வரை தாய்மொழியில் கல்வி என்ற திட்டத்தைக் கொண்டு வந்ததின் பின்பே ஆங்கிலக் கல்வி புறக்கணிக்கப்பட்டதென்ற நம்பிக்கை பரவலாக இருந்துவருகிறது. நம்பிக்கை மட்டுமல்ல; இந்த 'அநியாயத்திட்டத்திற்கு' உடந்தையாயிருந்த அனைவருக்கும் தினசரி திட்டுக்கிடைக்கிறது. ஆங்கிலத்தின் தரம் குறைந்ததாலே இன்று நாட்டில் பல துன்பங்கள் நிலைபெறுகின்றன. பிள்ளைகளின் கல்விமட்டுமல்ல அதனாற் கிடைக்கும் வளர்ச்சியுங்குன்றி விடுகிறதென்று கதறுகின்றனர்.

இந்த மயக்கநிலை எதனைப் போக்கும்? மக்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டால், பெரும் அவஸ்தைப்படுகிறார்கள். பொருள் இருந்தும் குழந்தைகளுக்கு ஒரு தகரப்பால் தானும் வாங்கமுடியவில்லையே என்று கடந்த ஆட்சியில் குறை கூறினர்கள்.

இன்று கடைகளிலே கட்டிப்பால், இன்னும் பல்வேறு வகைகளில் காணும் பால் உணவுகள் நிரம்பி வழிகின்றன. விலையை கேட்டுவிட்டு, கண்களால் பார்த்துவிட்டுப் போக வழி பிறந்திருக்கிறது.

ஆங்கிலம் உயர் கல்விக்கு மிக அவசியம்; ஆயினும் அதன் அவசியம், தாய்மொழி மூலம் கல்வி கற்பதன் கோட்பாட்டுக்கு மேலானதல்ல.

பாலர் வகுப்புத் தொடக்கம் ஜி. சி. ஈ. உயர்தரம் வரைக்கும் தாய்மொழியில் எவ்வளவு இலகுவாக, திறமையாக மாணவர்கள் தங்கள் ஆற்றலின் முழு வலிமை கொண்டு கல்வி கற்று முன்னேறுகின்றனர்.

கொழும்பு மாநகரம் போன்ற ஆங்கில நாகரிகத்தின் இரகசிய இருப்பிடங்களை நாம் கணக்கில் கொள்ளவில்லை. ஆங்கில ஆட்சி, ஆங்கிலப் பண்பாடு, ஆங்கில உடை, நடை, பாவனை, ஆங்கிலக் கல்வி- இவையாவும் நகர மக்களில் பலர் இன்றும் விரும்பும் பண்டங்கள். இவ்விருப்பம் ஒரு தொற்றுநோய். நாட்டு மக்களை, கிராமவாசிகளை இது தொற்றாமல் பாதுகாப்பது ஒரு சுதந்திர ஆட்சியின் பொறுப்பாகும்.

எனவே ஆங்கிலம் இன்றைய கல்வி முறையில் ஒரு அவசியமான பாடமென்பதை எவரும் மறுக்க மாட்டார். அதனை வளர்க்க மறுபடியும் ஆங்கிலம் மூலம் கல்வி கற்பிப்பது உசிதமென மனப்பால் குடிக்கும் மக்களை நாமென்னென்று வர்ணிப்பது.

பல்கலைக்கழகப் படிப்பு - அது என்னதுறையானாலும்- ஆங்கில அறிவு இல்லாமல் எவ்விதத்திலும் முதிர்ச்சியடையாதென்பது முழு உண்மை.

அதற்கு வழி என்ன?

பிரிட்டனிலிருந்து ஆசிரியர்களை அரசாங்கம் வரவழைக்க உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி. அதனை நம்ப நாம் தயாரில்லை. ஆயினும் அது ஒரு அடிப்படை உண்மையை வெளிப்படுத்துகிறது.

ஆங்கிலத்தை ஒரு ஆயுதமாகப் பாவிக்கப் பழக வேண்டும். ஆங்கிலத்தில் பாண்டித்தியம் அனைவருக்கும் தேவையில்லை. உயர் கல்விக்குரிய விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல் போன்ற பல துறைகளில் வெளிவரும் தரமான நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவருகின்றன. அவற்றை விளங்கவும், உயர்மட்டத்தில் பல்கலைக்கழக கருத்துப் பரிமாறல் ஆங்கிலத்தில் நடத்தவும் ஆங்கிலம் அத்தியாவசியம்.

பல்கலைக்கழகங்களே இந்த முயற்சியில் முன்னின்று, பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவி கொண்டு இவ்வரிய திட்டத்தைச் செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளன.

### சைவசித்தாந்த வகுப்புகள்

(நெல்லியடி)

வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை நாட்களில் சைவசித்தாந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

வடபகுதியில் சைவமக்களிடையே வேதாந்தத் தெளிவின்மை காணப்படுவதனால், அக்குறையினைப் போக்கவே இவ்விளக்கவுரை வகுப்புக்கள் நடத்தப்போவதாக சுவாமி ஸ்ரீபரமானந்தா தெரிவித்துள்ளார். (ஈ)

## "எத்தரவளியான ஆயிரம் சுருட்டுக்கு ரூபா 15 கூலி உயர்வு வழங்கவும்" — முதலியார்

(யாழ்ப்பாணம்)

"எத்தரவளியான ஆயிரம் சுருட்டுக்கும் 15 ரூபா கூலி உயர்வு வழங்க வேண்டும். வழங்கத் தவறினால் சுருட்டுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்க வேண்டிய நிலை ஏற்படும்."

இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய அச்சங்கத் தலைவர் திரு. மா. க. முதலியார் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. முதலியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, "வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதையடுத்து அரசாங்கம் 70 ரூபா சம்பள உயர்வு வழங்கியுள்ளது. வாழ்க்கைச் செலவு ஏனையோருக்கு உயர்ந்தது போல சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் உயர்ந்துள்ளது என்பதை எந்த முதலாளியும் மறுக்கமாட்டார்கள். வாழ்க்கைச் செலவு உயர்வை சமாளிப்பதற்காக எத்தரவளியான ஆயிரம் சுருட்டுக்கும் 15 ரூபா கூலி உயர்வு வழங்கியேயாக வேண்டும்.

1979-ம் ஆண்டு எமது சங்கம் கூலி உயர்வு கோரிப் போராட்டம் நடாத்தி ஆயிரம் சுருட்டுக்கு 50 ரூபா கூலியைப் பெற்றது. சொற்ப காலம் 50 ரூபா கூலியை வழங்கிய முதலாளிமார் பின்னர் குறைந்த கூலியை வழங்கி வந்தனர். அன்று நாம் போராடிப் பெற்ற 50 ரூபா கூலியை இனிமேல் தருவதாக முதலாளிமார் கூறுவது சுருட்டுத் தொழிலாளர்களைக் கேலி செய்வது போல் உள்ளது. அந்த மாதிரியான ஒரு நிலை இனிமேலும் ஏற்படுமானால் எமது சங்கம் கூலிக் குழப்பத்தில் இறங்கத் தயங்கமாட்டாது" என்றார்.

பசப்பு வார்த்தைகளைக்கூறி தொழிலாளர்களின் கூலி உயர்வைக் குறைத்து வழங்க முன் வந்திருக்கும் உற்பத்தியாளர் சங்கத்தையோ அன்றிப் பதிவு செய்யப்படாத தொழிலாளர் சங்கங்களையோ நம்பித் தொழிலாளர்கள் ஏமாறக்கூடாது. 15 ரூபா கூலி உயர்வு வழங்குவது ஒன்றும் கடினமான செயலல்ல."

சங்கக் காரியதரிசி திரு. க. தங்கராசா, திரு. க. சிவலிங்கம், திரு. செ. தம்பிராசா, திரு. அ. விவேகானந்தராசா உட்படப் பலர் உரையாற்றினர். (கொ)

## மக்கள் கருத்து

### பரீட்சை சபையின் கவனத்திற்கு

ஆண்டிறுதிப் பரீட்சைக்கு யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பரீட்சை சபையினர் தயாரித்து வழங்கிய 10 ம்வகுப்புக்கான தமிழ்மொழி வினத்தாள் சம்பந்தமாக 18-11-80, 21-11-80 ஆகிய தேதிகளில் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த கடிதங்கள் மிகமிக முக்கியமானவை அக்கடிதங்கள் பலருடைய சிந்தனையைத் தூண்டியிருக்கும் என்பது ஒரு சிறிதும் மிகையாகாது.

பரீட்சைத் திணைக்களம் அனுப்பிய தமிழ்மொழி முன்மாதிரி வினத்தாளை ஆசிரியர்கள் எல்லோரும் பார்வையிட்டிருப்பர். அதேபோன்று வினத்தாள்களைத் தயாரித்த பரீட்சைச் சபையினரும் முன்மாதிரி வினத்தாளை மிகமிக நுணுக்கமாகப் பார்வையிட்டிருப்பர்.

எனவே அவர்கள் வினத்தாளைத் தயாரிக்கும்போது முன்மாதிரி வினத்தாளை நூற்றுக்கு நூறுவீதம் தழுவியே தயாரித்திருத்தல் வேண்டும். ஆனல் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. முதலாம் பகுதிக்கான முன்மாதிரி வினத்தாளில் இடம்பெற்றுள்ளவை போன்ற முக்கியமான பலவினக்கள் ஆண்டிறுதிப் பரீட்சை வினத்தாளில் இடம்பெறவில்லை. அனல் முன்மாதிரி வினத்தாளில் காணப்படாத அமைப்பினையுடைய வினக்கள் பலஇடம்பெற்றுள்ளன. பகுதி 2 க்கான வினத்தாளும் ஒழுங்காக அமையவில்லை ஆனல் வேறு சில மாகாணங்களில் கல்வித் திணைக்களங்கள் 10-ம் வகுப்புக்கான பரீட்சையை நடத்தியதெனவும் அங்கு தயாரிக்கப்பட்ட தமிழ்மொழி வினத்தாள் பரீட்சைத் திணைகளத்தின் முன்மாதிரி வினத்தாளை முற்றிலும் தழுவியே தயாரிக்கப்பட்டிருந்ததென்றும் அறிகின்றோம் நிலைமை இவ்வாறிருக்க பரீட்சைச் சபையினர் வேறுவிதமாகத் தமிழ்மொழி வினத்தாளைத் தயாரித்ததன் மர்மம் என்ன என்பது புரியாத புதிராக இருக்கிறது.

குழந்தைப் பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்று பாட்டிமார் சொல்லுவார்கள். இந்த நிலையிலேயே நாம் இன்று இருந்து வருகிறோம். தமிழ்மொழி வினத்தாள் தொடர்பான முடிபைக்காலந்தாழ்த்தாது 'ஈழநாடு' வாயிலாக வெளியிடுமாறு பரீட்சைச் சபையினரை மாணவர்கள் சார்பாக வேண்டுகின்றோம்.

க. சுந்தரலிங்கம்
அளவெட்டி.

ந. குணநாயகம்
மல்லாகம்.

சு. லோகேஸ்வரன்
சுந்தரோடை.

### ஈச்சமோட்டையில் நாவலர் விழா

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி சைவமகாசபையினரின் நாவலர் விழா இம்மாதம் 29 ம்திகதி மாலை ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞானவைரவர் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகாசபைத் தலைவர் திரு சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகப்பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி, திருமதி இ. செல்லத்துரை, திரு. வே. யுகபாலசிங்கம் உட்படப் பலர் நாவலர் நினைவுச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவர், இவ்விழாவில் நாவலர் நினைவு தினத்தையொட்டி சைவமகாசபையினர் நடாத்தியசமயப்போட்டி, பண்ணிசைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கப்படும். (அ)

## நாடும் நடப்பும்

யாழ் நகரில் ஒருகோமெய்னி இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

இந்தக் கோமெய்னி யாழ் நகர வீதிகளில் சைக்கிளில் சுற்றிவருகிறார். நகரைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டுமென்று ஆலோசனை கூறுவதுடன் அவர் நின்றுவிடுவதில்லை! சமயத்தில் தாமே குப்பை கூளங்களை அகற்றி சுத்திகரிப்பு வேலைகளிலும் ஈடுபடுகிறார்.

வட்டார வேறுபாடோ, இன, மத வேறுபாடோ அவருக்கு இல்லை.

யாழ். மாநகரசபையின் இதர உறுப்பினர்கள் அவருக்கு வைத்திருக்கும் பெயர்தான் கோமெய்னி.

அவருடையஅழகான அரைத்தாடிதான் சக உறுப்பினர்கள் அவருக்கு இந்தப் பெயரைச் சூட்டக் காரணமாக இருக்க வேண்டும். இந்தக் கோமெய்னிக்குக் கோர வார்த்தைகள் வராது. அனைவருடனும் அன்புடன் பழகுகிறார்.

இவரது பெயர் மோஹிதீன் பிச்சை!

என்னை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலுக்குச் செல்லும் ஸ்ரீவெங்கடேசன்வீதி என்றழைக்கப்படும் ஒழுங்கையுமேயில ஐந்து நிமிட மழைக்கு கணுக்கால் அளவுக்கு வெள்ளம் தேங்கிவிடும். இதுபற்றிச் சில தடவைகளில் இப்பத்தியில் எழுதியிருக்கிறேன். சென்ற தேர்தலில் இந்த வட்டாரத்தில் வோட்டுக்கேட்டு வெற்றியீட்டிய மெம்பருக்கும் பலதடவையிலும் மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். சமீபத்தில் சுவாமி இந்த வெள்ளத்தினூடாகவே கோவிலுக்குச் செல்லும் சந்தர்ப்பம் நேர்ந்தது.

"ஏதுபற்றிநான்மேயருடன் சண்டைகூடப் பிடித்திருக்கிறேன்" என்று அவர் சமாதானம் சொல்லிவிட்டார். காரியம் எதுவும் நடக்கவில்லை. வெள்ளம் தேங்கி நின்றது. உதவி மேயருங்கூட இந்த வெள்ளத்தைத் தாண்டிச்சென்றார். ஏதாவது செய்யத்தான்வேண்டுமென்று அவரும் சொன்னார். மேயருக்கும் இது பற்றித் தெரியாமலிருக்க முடியாது.

சென்ற வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் 'கோமெய்னி'யை மாநகர சபையில் சந்தித்தேன். வெங்கடேசன்வீதி ஒழுங்கை வெள்ளம்பற்றித் தெரிவித்தேன்.

நண்பகலில் அவர் அந்த இடத்துக்குச் சென்று பார்த்தார். பிற்பகல் இரண்டு மணிக்கும் மூன்றுமணிக்குமிடையில் கட்டிட இடிபாடுகள் கற்களும் கரையும் மண்ணும் டிராக்டரில் வந்து பறிக்கப்பட்டு வெள்ளத்தை மூடிப் பரவி விடப்பட்டது. தேங்கி நின்ற வெள்ளத்தைக்காணோம்.

பெரிய கற்கள் சில வாகனப் போக்குவரத்துக்குச் சற்றுத் தொல்லையாக இருந்தது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை மற்றுமிருவருடன் பிக்கான், மண்வெட்டியுடன் கோமெய்னி சைக்கிளில் வந்து இறங்கினார். மூவருமாகப் பெரிய கற்களை எடுத்து விட்டு மேடுபள்ளம் இல்லாமல் சீர் செய்துவிட்டுப் பிற்பகல் இரண்டு மணிக்குமேல் சென்றுவிட்டனர்.

மேயரிடம் கேட்டு இந்த வேலைகளைச் செய்வதாயிருந்தால் உடனடியாக நடைபெறாது என்பது அவரது கருத்து.

அந்தந்தப்பகுதி உத்தியோகத்தர்களிடம் சொல்லி உடனுக்குடன் செய்யவேண்டிய வேலைகளை நாமே கூடநின்று செய்துவிடுவதே சுலபம் என்கிறார்.

இப்படி இவர் நகரின் பல

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

இடங்களிலும் செய்துவருகிறார். மக்களது நல்லபிமானத்தை தனது சேவையின் மூலம் பெற்றுவிட்டார் இந்தக் 'கோமெய்னி'.

இத்தகையவர்களுக்கு அரசாங்கம் விசேடபடி வழங்கவேண்டும். நகரமக்களின் வரிப்பணத்திலிருந்து விசேடபடி வழங்குவதை மக்களே ஏற்றுக்கொள்வர்!

மெம்பர் என்ற பெயருடன் மட்டும் இருப்பவர்களுக்கு விசேடபடி கொடுக்க யார்தான் சம்மதிப்பர்?

ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வ. போ. ச. வில்

# பணம் பெற்று சாரதிபயிற்சி வழங்குவதை நிறுத்துக"

## பண்டிதர் சபையில் கேட்பார்

(கொழும்பு)

வடபிரதேச போக்குவரத்துச் சபை சாரதிகளைப் பயிற்றுவதற்கு ஆளுக்கு மூவாயிரம் ரூபா அறவிடுவதை உடன் நிறுத்துமாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினம் பாராளுமன்றத்தில் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பார்.

இம்மாதம் 27-ம் திகதி பாராளுமன்றத்தில் இக்கேள்வியைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

இக்கேள்வியின் விபரம் வருமாறு:-

பிரதேச போக்குவரத்துச் சபைகள் நிறுவப்பட்டபின் 17--80 வரை ஒவ்வொரு சபையும் புதிதாக நியமித்த சாரதிகள் நடத்துனர்கள், பரிசோதகர்கள், பொறியியல், பணியாளர்கள், சிற்றூழியர்கள், தனித்தனி எத்தனை பேர் என்பதையும்;

சாரதிகளைப் புதிதாக நியமிப்பதற்குமுன் அவர்களுக்கு எவ்வளவு காலப்பயிற்சி கொடுக்கப்படுகிறதென்பதையும் பயிற்சிக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் படி எவ்வளவென்பதையும்;

வடபிரதேச போக்குவரத்துச் சபை சாரதிகளைப் பயிற்றுதற்கு ஆளுக்கு மூவாயிரம் ரூபா எப்பொழுது பெறத் தொடங்கியதென்பதையும்;

1980-7-1 ஆந் தேதிவரை மூவாயிரம் ரூபா கொடுத்துப் பயிற்சி பெற்றோரும் பெறுவோரும் எத்தனை பேர் என்பதையும்; இவர்களில் எத்தனை பேருக்கு நியமனம் கொடுக்கப்பட்டது என்பதையும்;

வடபிரதேச போக்குவரத்துச் சபை இவ்வாறு பணம் பெற்றுப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை உடனே நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அமைச்சர் கூறுவாரா?

அன்றேல் ஏன்?

காலஞ்சென்ற வண. பிதா ஞானப்பிரகாசரைக் கௌரவிக்கும் பொருட்டு நினைவு முத்திரையொன்று வெளியிட வேண்டும் என்பதை அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருப்பதினால் தலைசிறந்த தத்துவமேதையும் கற்றுணர்ந்த வரலாற்றாசிரியரும் தேர்ந்த தமிழறிஞரும் தமிழ் மொழிக்கும் கலாச்சாரத்துக்கும் கத்தோலிக்க சமயத்துக்கும் பெருஞ் சேவை ஆற்றியவருமான காலஞ்சென்ற வண. பிதா சு. ஞானப்பிரகாசரை நினைவுகூரும் பொருட்டு அத்தகைய முத்திரையொன்றை வெளியிடுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு தபால் தந்தி, போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு நல்லூர் எம். பி. திரு மு. சிவசிதம்பரம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

---

## இவர்களுக்கு டிச. 28, 29 ல் பரீட்சை

(கொழும்பு)

அண்மையில் வெளியான பரீட்சை விடைத்தாள்களால் பாதிக்கப்பட்ட 800 ஜி. சீ. ஈ உயர்தர மாணவர்களுக்கான விசேட பரீட்சை அடுத்த மாதம் 28ம், 29ம் திகதிகளில் நடைபெறும்.

நாடு முழுவதிலும் 20 பரீட்சை மண்டபங்களில் 5 பாடங்களுக்கு மட்டுமே இப்பரீட்சை நடைபெறும். (இ)

---

## வீடுகள் பெற விண்ணப்பம்

(பண்டத்தரிப்பு)

அரசின் 30 வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மானிப்பாய் தேர்தல் தொகுதியில் கட்டுடை இடிகுண்டடி என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ள 30 வீடுகளுக்கும் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வலி-தென்மேற்கு உதவி அரசாங்க அதிபரினால் கோரப்பட்டுள்ளன. இந்த வீடமைப்புத் திட்டத்தில் வீடு பெறவிரும்புபவர்கள் அச்சுவேலி ஒரு வருடகாலத்திற்கு கட்டுடை-இடிகுண்டடி வீடமைப்புத் திட்டத்திலிருந்து ஐந்துமைல் சுற்றளவுக்குள் தொடர்ந்து வசித்துவருபவர்களாக இருக்க வேண்டும் என்றும், 250 ரூபாவக்கும் 350 ரூபாவுக்கும் இடைப்பட்ட மாதவருமானமுடையவர்களாக இருக்க வேண்டும் என்றும் வீடமைப்புத் திட்ட காணியிலிருந்து 3 மைல் சுற்றளவுக்குள் சொந்த வீடோ அல்லது வீடுகட்டக் காணியோ எதுவும் அற்றவராக இருக்கவேண்டும் என்றும், விண்ணப்ப முடிவு திகதி டிசம்பர் மாதம் 20ம் திகதி 20-12-80 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மக்கள்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கலையொட்டி பொது எதிரிக்கு எதிராக ஏற்பட்ட ஒருமைப்பாடேயாகும். வடபகுதியைப் பொறுத்தவரையில் இக்கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதுபோன்ற கூட்டங்களைச் சிங்களப் பகுதிகளில் தொடர்ந்து நடத்துவோம். தமிழ்மக்களின் உணர்வுகளைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்வதற்கும் இது வழி செய்யும்.

பாராளுமன்றத் தேர்தலை நம்பிச் செயற்படுவதில் பிரயோசனமில்லை. இது தலையிடிக்கு தலையணையை மாற்றும் முட்டாள் நடவடிக்கையாகும். எனவே மக்கள் போராட்டப்பாதையில் அணிதிரள்வதே சரியான வழியாகும்.

ஜனாப் எம். ஏ. சி. இக்பால், திருவாளர்கள் எம். வி. நட... ...ம் உரையாற்றினர்.

(அ)

---

## "ரூ. 60 கூலி கோரிக்கைக்கு 200 முதலாளிகள் ஆதரவு"

(யாழ்ப்பாணம்)

"ஆயிரம் சுருட்டுக்கு 60 ரூபா கூலி வழங்க வேண்டுமென எமது சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. எமது சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இருநூறு முதலாளிகள் எமது கோரிக்கைக்கு ஆதரவாகப் பிரசுரங்கள் அடித்து வெளியிட்டுள்ளார்கள்".

இவ்வாறு அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய மேற்படி சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம் கூறினார்.

சங்கப் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. துரைராஜசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நாம் கேட்கும் சம்பள உயர்வு அரசாங்கம் விகிதாசாரமாக உயர்த்தியதை அடிப்படையாகக் கொண்டதேயாகும். நாம் எவ்வளவு சம்பளத்தைக் கூடுதலாக உயர்த்தினாலும் அச்சம்பளத்தைத் தொழிலாளர் கையில் சரியாக வாங்கிக் கொடுக்கவேண்டும். இடைத்தரகர்கள் ... நோட்டீஸ் கூலியாக இருக்கக்கூடாது. தற்சமயம் நாம் நடத்தும் போராட்டம் முறியடிக்கப்பட்டால் முதலாளிகளுக்கே உதவியாக முடியும். சென்ற போராட்டத்தில் தொழிலாளர்கள் விட்ட பிழைகளை இப்போராட்டத்திலும் விடக்கூடாது".

திருவாளர்கள் ஆ நடராசா, க. சுப்பிரமணியம், சி. கந்தையா, சண்முகவேல், கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் பேசினர். (செ-அ)

---

## செல்வச்சந்நிதி தேர் திருப்பணிக்கு புதிய சபை

(புலோலி)

ஸ்தம்பித நிலையிலிருந்த தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருப்பணி நடவடிக்கைகள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலுவால் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திருப்பணிக்கெனத் திருப்பணிச்சபை, தேர்த்திருப்பணி குழுவென வெவ்வேறாக இயங்கி வந்ததால் பொதுமக்களிடையே ஏற்பட்ட குழப்பநிலையே இப்பணி ஸ்தம்பிதமடையக் காரணமாக இருந்தது.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் இருதரப்பினருக்கும் இதுபற்றி விளக்கிப் புதிய தேர்த்திருப்பணி சபையொன்றை அமைக்கும்படி ஆலோசனை வழங்கியிருந்தார். இதற்கிணங்க உதவி அரசாங்க அதிபர் முன்னிலையில் புதிய தேர்த் திருப்பணிசபை ஒன்று அமைக்கப்பட்டது.

இதுவரையும் இக்குழுக்களினால் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நிதியையும் மரங்கள் முதலியவற்றையும் உதவி அரசாங்க அதிபர் பொறுப்பேற்றுப் புதிய திருப்பணிச் சபையிடம் கையளிக்கவுள்ளார்.

இத்தேர்த் திருப்பணிக்கென பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளையில் கணக்குத் திறக்கப்பட்டுள்ளதாகவும். இதற்குப் பண உதவி செய்யும் பொதுமக்கள் அவ்வங்கிக் கணக்கில் சேர்க்கலாம் என்றும் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

சுமார் நாலரை லட்ச ரூபா செலவில் இப்புதிய தேர் அமைக்கப்படவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (க)

---

## "நீ ஆண்பிள்ளையானால் அடிபடுவோம்வாடாஎன்றனர்

### சங்குவேலி கொலை வழக்கில் இறந்தவரின் மனைவி சாட்சியம்

(மாவிட்டபுரம்)

எமது வளவு வேலிக்கருகில் வந்து நின்ற எதிரிகள் "நீ ஆண் பிள்ளையானால் வாடா அடிபடுவோம்' என்று கூறிக் கணவரை அழைத்தனர். கணவர் கம்பி ஒன்றை எடுத்துக்கொண்டுபோக எதிரிகள் கணவரை கம்பியால் தாக்கி வாளால் வெட்டினர். அவர் இரத்த வெள்ளத்தில் குப்புற விழுந்தார்.

இவ்வாறுசங்குவேலிக்கொலை வழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் மனைவி தர்மராசா கிருஷ்ணதேவி கூறினார்.

சங்குவேலி வடக்கைச் சேர்ந்த அருளம்பலம் தர்மராசா என்பவரை வாளால் வெட்டியும் பொல்லு கம்பி போன்றவற்றினால் தாக்கியும் கொலை செய்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த கந்தையா இரவீந்திரன், கந்தையா பத்மநாதன், கணபதிப்பிள்ளை சிவலிங்கம், முருகேசு நடராசா ஆகியோர் மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் கொலையுண்டவரின் மனைவி கிருஷ்ணதேவி மேலும் தனது சாட்சியத்தில் கூறியதாவது:

கொலையுண்டவர் எனது கணவர் 3 வருடங்களின் முன் எங்கள் திருமணம் நடந்தது. இரு பிள்ளைகளும் உண்டு. சம்பவ தினமான சென்ற வைகாசி மாதம் 8ம் திகதி காலை 6 மணிக்கு கணவர் யாருடைய தோட்டத்துக்கு நலம் போடப் போவதாகக் கூறிச் சென்றார். பின்னர் பிற்பகல் 3 மணிக்கு திரும்பி வந்தார். என்னிடம் 20 ரூபா தந்தபின் உணவருந்தினார். அப்போது எங்கள் வளவினுள் மேய்ந்து கொண்டு நின்ற மாடொன்றை பிடித்துக் கட்டிவிட்டு பலத்த சத்தம் போட்டார். இது யாருடைய மாடு என்று கேட்டார். நான் 3ம் எதிரியினுடையது எனக்கூறினேன். 3ம் எதிரியின் வீடு பக்கத்தில் உள்ளது 3ம் எதிரியின் மனைவி யோகாத்தினம் எங்கள் வீட்டு வேலியில் வந்து நின்று எனது கணவரை பேசினார். கையில் தடி ஒன்றும் வைத்திருந்தார். அச்சமயம் அங்கு ஏனைய எதிரிகளும் நின்றனர்.

நீ ஆண் பிள்ளையானால் வாடா அடிபடுவோம் என எதிரிகள் கத்தினர். கணவர் ஒன்றும் பேசவில்லை. ஒரு கம்பியை எடுத்துக்கொண்டு ஓடிப்போனார். நானும் பின்னே ஓடினேன். 3ம் எதிரி கணவருக்கு இரும்பு கம்பியால் தலையில் அடித்தார். இரத்தம் வழிந்தபோது நான் கணவரை வருமாறு கூப்பிட்டேன். அப்போது 1ம் எதிரி கணவருக்கு வாளால் வெட்டினார். கணவர் குப்புற விழவே எதிரிகள் எல்லோரும் சேர்ந்து தாக்கினர். கணவரது காது, வாய், மூக்கு என்பவற்றால் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. பின்னர் அவர் இறந்துவிட்டார் என்றார்.

மேல் விசாரணை ஒத்திப் போடப்பட்டது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர்: ஜே. செல்வரத்தினம், திருமதி எம். பீரிஸ், திரு. கே. விஜயேந்திரா ஆகியோரும் பொலிஸ் தரப்பில் சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட் வேலாயுதபிள்ளையும் ஆஜராகியிருக்கனர். (எ)

---

## "பட்டம் பதவிகள் மனித வாழ்வில் நிலையானவையல்ல

### ஆசிரியகலாசாலை அதிபர் உரை

(மட்டக்களப்பு)

"பட்டம், பதவிகள் மனித வாழ்வில் நிலையானவைகள் அல்ல பட்டமும் பதவியும் தம்மை வந்தடையும்போது நல்லமனத்துடனும், பெருந்தன்மையுடனும் செயல்பட்டு நல்லவர்களாகவும் தயாளகுணம் படைத்தவர்களாகவும் மிளிர்வதுதான் மனிதவாழ்வில் நிலையானதாகும்."

இவ்வாறு மட்டக்களப்பு ஆசிரியகலாசாலையின் புதிய அதிபராகப் பதவியேற்ற திரு சி. புலேந்திரன் பயிற்சிஆசிரியர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட வரவேற்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார், அவர் அங்கு தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

"நான் இக்கலாசாலையின் முன்னேற்றம் கருதி பலதுரித நடவடிக்கைகளைமேற்கொள்ளவிருக்கிறேன். எனது நல்ல பல நடவடிக்கைகளுக்கு பயிற்சியாளர்களாகிய நீங்களும் எனது சக விரிவுரையாளர்களும், சிற்றூழியர்களும், ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

இக்கலாசாலையில் கட்டிடம் பற்றாக்குறை நிலவுகின்றது. இங்கு விஞ்ஞான நெறியை மேற்கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு ஆய்வுகூட வசதி இல்லாதிருக்கின்றது" இவற்றை நிவர்த்திசெய்ய முயலுவேன் என்றார்.

இவ்விழாவில் இக்கலாசாலையின் முன்னாள் அதிபர் திரு கே. கோணசபிள்ளை, திரு. கே. கந்தசாமி உட்பட பலர் உரையாற்றினர்.

---

## சபாஷ் கவாஸ்கர்

சிட்னி, நவ. 24

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்துவரும் சுனில் கவாஸ்கர் தலைமையிலான இந்தியக் கிரிக்கட் கோஷ்டி மேற்கு அவுஸ்திரேலியக் கோஷ்டியுடன் ஆடிய 3 நாள் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கட் இழப்புக்கு 312 ஓட்டங்களைப் பெற்றது.

சுனில் கவாஸ்கர் ஆஸ்திரேலிய மண்ணில் தாம் முதன்முதலில் ஆடிய இந்த ஆட்டத்தில் 157 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது இவரது மைத்துனரும் உதவி காப்டனுமான குண்டப்பா விஸ்வநாத் 75 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற்கு அவுஸ்திரேலியா முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கட் இழப்புக்கு 296 ஓட்டங்களையும் 2வது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 24 ஓட்டங்களையும் பெற்றது.

நேற்று திங்கட்கிழமை ஆட்டத்தின் இறுதிநாள். (இ)

---

## ஞானப்பிரகாசர் சிலை

(மன்னார்)

பேசாலையில் பன்மொழிப் புலவர் ஞானப்பிரகாசர் உருவச்சிலை வைக்கப்பட்டது.

வைத்திய கலாநிதி திரு. இமானுவேல் பீரிஸ் இச்சிலையைத் திறந்து வைத்தார். பேசாலை தொழிலதிபர் திரு-பீற்றர் குரூஸ் சிலைக்கு மாலையணிவித்தார்.

பேசாலை வளர்கலை மன்றத்தால் நிர்மாணிக்கப்பட்ட இச்சிலைத் திறப்புவிழாவில் வண. பிதா சற்றன் குருஸ் அடிகள், பேசாலை கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு. டங்கிராஸ் குரூஸ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''மக்கள் விரோத நடவடிக்கைகளை ஒழிக்க தேர்தல் மார்க்கமல்ல''

## ஐந்து கட்சிக் கூட்டத்தில் 'சண்'

(யாழ்ப்பாணம்)

''இன்று சகல மக்களினதும் பொது எதிரியாக யு என் பி. விளங்குகின்றது. அது மக்கள் விரோத நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுகிறது. இதற்கு மாற்றுவறி காண்பதற்குப் பாராளுமன்றத் தேர்தலை - 1983-ம் ஆண்டுத் தேர்தலை - நம்பிப் பிரயோசனமில்லை. ஐக்கியப்படுத்தக்கூடிய சகல யு என். பி. எதிர்ப்புச் சக்திகளையும் ஐக்கியப்படுத்தி, தொழிலாள வர்க்கத் தலைமையைவலுப்படுத்தி எதிரியை முறியடிக்கப் போராட வேண்டும்.''

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு என். சண்முகதாசன் யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற அரசுக்கு எதிரான ஐந்து கட்சிக் கூட்டத்தில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சண்முகதாசன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:.

''1977-ல் ஐ தே க. ஆட்சிக்கு வந்த பின்னர், இலங்கை நவகாலனித்துவ அடிமை முறையின் கொடிய பாதிப்புக்குள்ளாகியுள்ளது. எமது பொருளாதாரம் அந்நிய ஏகாதிபத்திய வண்டிச்சில்லுடன் பிணைக்கப்பட்டிருந்தமை மென்மேலும் இறுக்கப்பட்டு, எமது எதிர்காலச் சந்ததிகளை அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு அடகு வைத்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் தாங்கொணாத துயர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் வீதியில் விடப்பட்டுள்ளன. வாழ்க்கைச்செலவு வானளாவ உயர்ந்துள்ளது. நாட்டின் மூலவளங்கள், சொத்துக்கள் பெரிய முதலாளிகளிடமும், அந்நியச் சுரண்டல்காரரிடமும் படிப்படியாக ஒப்படைக்கப்படுகின்றன.

### ஜே.ஆரின் வண்டிலும் மாடும் எங்கே?

''கடந்த ஆட்சிக் காலத்தில் எரிபொருட்களின் விலை சிறிது உயர்ந்ததும் ஜே. ஆர். மாட்டு வண்டியில் பாராளுமன்றம் சென்றார். இன்று எரிபொருட்களின் விலை எவ்வளவோ உயர்ந்துவிட்டதே! ஜே.ஆரின் வண்டிலும் மாடும் எங்கே போய்விட்டனவோ தெரியவில்லை.

பொது எதிரியை வீழ்த்துவதற்கான சரியான தந்திரோபாயத்தைச் சீனப் புரட்சிக் காலகட்டத்தில், ஜப்பானுக்கு எதிரான போராட்டவேளையில் புரட்சித் தலைவர் மாஓசேதுங் நன்கு விளக்கியுள்ளார். இதனை மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

### விசாரணையின்றிச் சிறைவைக்கப்பட்டோம்

சிறிமாவின் ஆட்சிக்காலத்தில் இங்குள்ள தமிழ் இளைஞர்கள் மாத்திரமல்ல, நாமும் அநியாயமாகத்தான் சிறை வைக்கப்பட்டோம். 1971-ம் ஆண்டு ஏப்ரல் சம்பவத்தையொட்டி நான் எவ்வித விசாரணையுமின்றிப் பத்து மாதங்கள் சிறை வைக்கப்பட்டேன். எமது கட்சியைச் சேர்ந்த செயற்களத் தோழர்கள் பலர் சிறை வைக்கப்பட்டனர். அதற்கான பதிலைத்தான் மக்கள் சிறிமாவுக்கு வழங்கிவிட்டார்கள். இன்று ஜே. ஆர். அரசு சிறிமாவின் குடியியல் உரிமைகளைப் பறித்த அநாகரிகமான செயலை எவரும் கண்டிக்கத்தான் செய்வர்.



### தமிழர் உணர்வுகளை தென்னிலங்கை அறியவைப்போம்

ஐந்து கட்சிகளுக்கும் வெவ்வேறான கொள்கைகள், குறிக்கோள்கள் இருப்பினும் பொது எதிரியை வீழ்த்தவே ஒன்றாய் நின்று குரல் கொடுக்கிறோம். இந்தக்கூட்டு, பாராளுமன்றத்துக்குப் போவதற்கு இணைந்த கூட்டல்ல. பொதுப் பிரச்னை

(5ம் பக்கம் பார்க்க)

# ''தமிழ் ஈழ விடுதலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்''

— மாவை சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

''தமிழ்தேசிய இனம் அங்கீகரிக்கப்படவேண்டும்; தமிழ்ஈழ விடுதலை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்'' என்று யாழ் திறந்தவெளியரங்கில் நடந்த 5 கட்சிகளின் கூட்டத்தில் பேசிய இளைஞர்பேரவை அமைப்பாளர் மாவை சேனாதிராசா, பலத்தகரகோஷத்தின் மத்தியில் கூறினார்

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மாவை சேனாதிராசா மேலும் கூறியதாவது: 'இன்றுகட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. 5 கட்சிகள் மட்டுமல்ல, தமிழ்ஈழத்திலும், ஸ்ரீலங்காவிலும் உள்ள ஏனைய கட்சிகளையும் இணைக்க வேண்டும். ஸ்ரீலங்காவிலும், தமிழ்ஈழத்திலும் வாழும் தமிழ், சிங்கள தமிழ்பேசும் மக்களின் பொதுவானபிரச்னைகளை ஜனநாயகரீதியில் வென்றெடுக்க- யூ. என் பி. அரசை எதிர்க்க 5 கட்சிகள் இணைந்துள்ளன.

''காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், முத்துக்குமாரசாமி உட்பட நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பல ஆண்டுகளாக சிறையில் வாடினர். நீதி விசாரணை நடத்தும்படி சிறையிலிருந்து கோரினோம். எதுவும் நடக்கவில்லை. விசாரணை நடத்துங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள் என்றுகோரி சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் ஆரம்பித்தோம். சிறிமா அம்மையார் செவிசாய்க்கவில்லை. அப்படி சிறையில் வாடிய இளைஞர்கள் தான் இன்று சிறிமாவுக்கு பாதுகாப்பாக நின்று இக்கூட்டத்தை நடத்துகிறார்கள் என்பதை அம்மையார் அறிய வேண்டும்''




# தலைவர்கள் காட்டிய.....

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

தோம். ஆனால் தலைவர் ஜி ஜி. பொன்னம்பலம் ஒருபக்கம் நாங்கள் மறுபக்கமாக நின்று இவ்விடயத்தில் நேரடியாக மோதிக் கொண்டோம். டட்லியின் இல்லத்தில் ஆராய்ந்து கொண்டிருந்தோம்.

### மா. சபைக்கு எதிராக

வெளியில் சில பத்திரிகைகள் மாவட்ட சபைக்கு எதிராக மக்கள் மத்தியில் துவேஷ பிரசாரத்தைப் பரப்பினர் முன்னாள் நீதியரசர் பஸநாயக்கா பௌத்த பிக்குகள் இதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தனர். ஒரு இரவு டட்லி இல்லத்தில் நாங்கள் மாவட்ட சபைபற்றி ஆராய்ந்து கொண்டிருந்தோம். அப்போது எம். பி திரு. எதிரி சூரியா மது போதையில் அங்கு வந்தார். உம்மால்தான் இதெல்லாம் வந்தது என்று கூறி அமரர் திருவின் தலையில் இடித்தார். அப்போதுநான் இளமைத் துடி துடிப்புடன் இருந்தேன். இரத்தமெல்லாம் கொதித்தது நான் எழுந்தேன். டட்லி சேனநாயக்கா அவரின் நிலைமை புரிந்து என்னை தடுத்து விட்டார் அமரர் திருச்செல்வமோ அதை பொருட்படுத்தாமல் அமைதியாக இருந்தார். 'காரியம் கை கூட வேண்டும்' என்பதே அவரின் ஒரே கருத்தாக இருந்தது.

### தந்தையின் சிஷ்யனாக

அமரர் திருச்செல்வம் தந்தை செல்வாவின் சிஷ்யனாக மதிமந்திரியாக பக்கபலமாக நின்று அரசியல் வாழ்வில் முழுநேரமும் பணியாற்றினார். மாவட்ட சபைபற்றிய வெள்ளையறிக்கை வந்தபின் ''இது தொடர்பான சட்டத்தை நிறைவேற்ற முடியாது, ராஜினாமா செய்யப் போகிறேன்'' என்று அமரர் திருச்செல்வம் கூறியபோது தந்தை செல்வா தடுத்து நிறுத்தினார்: பின்னர் கோணேஸ்வரர் ஆலய விஷயமாக 3பேர் கொண்ட குழு ஒன்றை அமரர் திரு நியமித்தார். இதற்கு பௌத்தபிக்குகள் ஆட்சேபம் தெரிவித்ததால் டட்லி சேனநாயக்கா அக்குழுவை செயல்படாமல் தடை விதித்தார். இதனால் அமரர் திருச்செல் பதவியை துச்சமெனத் மதித்து அமைச்சர் பதவியை ராஜினமா செய்தார். அவர் நினைத்திருந்தால் தொடர்ந்து பதவியில் இருந்திருக்கலாம். ஆனால் அவர் அதை விரும்பவில்லை.

### தமிழ் ஈழம் பற்றி அறிக்கை

75ம் ஆண்டு காங்கேசன்துறை இடைத்தேர்தலின் போது முதன்முதலாக தமிழ் ஈழக் கோரிக்கையை வைத்து தந்தை செல்வா போட்டியிட்டார். அதுபற்றி அறிக்கை தயாரிக்கும் பொறுப்பு அமரர் 'திரு'விடமே ஒப்படைக்கப்பட்டது. மன்னார் இடைத் தேர்தலின்போது பத்துப்பேர் போட்டியிட விண்ணப்பித்தனர். அமரர் 'திரு'வும் நானும் இதுபற்றி நேரில் ஆராயச் சென்றோம். அன்று இரவு அதிகாலை வரை அரசியல விஷயமாக அவர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். தூக்கமேயாதுதுடிதுடிப்புடன் பேசினார். தமிழ் ஈழம் பற்றிய விஷயங்களை திருமலை பற்றிய விஷயங்களையும் ஆராய்ந்தோம்.

### தமிழினத்தின் இறைமை

77ம் ஆண்டு 'ட்ரயல் அட் பார்' வழக்கில் தமிழ் இனத்தின் இறைமை பற்றி வாதாடி உலகறியச் செய்தார் சிங்கள தேசிய இனத்திற்கு தமிழ் தேசிய இனத்தை ஆள உரிமைகிடையாது என வாதாடினார் நீதியரசர்கள் அவர் வாதத்தை நிராகரிக்கவில்லை. கூட்டுச் சேரா மாநாட்டின் போது இலங்கை வந்த வெளி நாட்டு நிருபர்கள் எங்கள் பிரச்னைகளை அறிய ஏற்பாடு செய்தார்.

### இளைஞர்களைக் காப்பாற்ற

கடைசியாக துரையப்பா கொலைவழக்கில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த 7 இளைஞர்களை காப்பாற்ற பெரும் முயற்சி எடுத்தார். எப்படியாவது இளைஞர்களைக் காப்பாற்றவேண்டும் என விரும்பினார். நோய்வாய்ப்பட்டு கடைசி மூச்சுவரை அவர் தமிழினத்திற்காகவே தொண்டாற்றினார்.

தந்தை செல்வா தலைவர் ஜி ஜி அமரர் திருச்செல்வம் ஆகியோர் காட்டிய பாதையில் தமிழ்மக்களைவழிநடத்திச் சென்று எமது லட்சியத்தை நிறைவேற்றுவோம். தமிழ் மக்கள் எமக்களித்த கட்டளையை ஆணையை நாங்கள் செயல் படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். நாங்கள் செல்லும் பாதை தெளிவானது. எங்களைப்பயன்படுத்தி எவரும் தங்களை உயர்த்திக் கொள்ள விடமாட்டோம் எமது இனத்தை வழி நடத்தி செல்வது எமது கடமை.

(க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
**Black Sunday**

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட சில தினங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.
**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வெற்றி முழக்கமிடும் 8-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா,
பி. எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
**மீனவ நண்பன்**

**வின்ஸர்** இன்னும் சிலதினங்கள் மட்டும் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர் நடித்த
**எதிரிகள் ஜாக்கிரதை**
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெய்சித்திரா அசோகன்
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

**SANTHI** Jaffna - 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
★ SIDNEY POITIER
★ MICHAEL CAINE in
**"The Wilby Conspiracy"**
Action - Suspense - Thriller - Color
Await! "THE DIRTY DOZEN"


## தமிழ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மக்களுக்கென்று ஒரு நாடில்லை; தனிநாடு வேண்டும என்று அரும்பாடுபட்டார் அமரர் திருச்செல்வம்.

தந்தை செல்வாவும் அமரர் திருச்செல்வமும் மலேசியாவில் பிறந்தவர்கள், இவர்களுக்கிடையில ஏற்பட்ட நட்பு இறுதிவரை நீடித்தது. அமரர் திரு. இலங்கை வருவதற்கு முழுக்காரணமாயிருந்தவர் தநதை செல்வா.

1619 ம் ஆண்டு சங்கிலி மன்னன் போத்துக்கீசரிடம் பறிகொடுத்த தமிழ் மக்களின் இறைமை மீண்டும் தமிழர்கைக்கு திரும்பிவந்துவிட்டதென்றும் அதனைப்பயன்படுத்த வேண்டுமென்றும் அமரர் திரு. உலகி... எடுத்துக்கூறினார்.

### தமிழினத்திற்கு உழைத்தார்

முன்னாள் செனட்டர் திரு. எஸ். நடராசா பேசுகையில், அமரர் திருச்செல்வம் இளம் பராயம் தொட்டு இறுதிவரை தந்தை செல்வாவுடன் சர்ந்து தமிழ் இனத்தின் ஈடேற்றத்திற்கு இரவுபகலாக உழைத்தார் என்று கூறினார்.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் பேசுகையில், அமரர் திருச்செல்வம் அமைச்சராக இருந்தபோது மொனராகலையில் ஒரு கூட்டத்தில் சமஷ்டி அமைப்பு பற்றி எடுத்துவிளக்கியதாகவும் அக்கூட்டத்திலிருந்த சிங்களத்தலைவர்கள் சமஷ்டி இப்படியானதென்றால் அதனை நாம் எதிர்க்கவேண்டும் என்று கூறியதாகவும் சொன்னார்.

மற்றொரு கூட்டத்தில் பிரின்ஸ் குணசேகரா தமிழரசுக் கட்சியினர் நாட்டைப் பிரிக்க முயல்வதாகக் கூறியபோது மேடையிலிருந்த அமைச்சர் திருச்செல்வம் தமிழ் மக்கள் சிங்களமக்களுடன் சமாதானத்துடன் வாழ்ந்து வந்தார்களென்றும் இனிமேலும் அப்படியே வாழ விரும்பமாட்டார்களென்றும் துணிவுடன் சிங்களமக்களுக்கு எடுத்துக்கூறியதாகவும் திரு. பாலசுப்பிரமணியம் கூறினார்.

### வித்தியானந்தன் உரை

பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது:

பண்டா - செல்வா ஒப்பந்தம், மாவட்டசபைமசோதா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களுக்கு காரணகர்த்தாவாக இருந்தவர் அமரர் திருச்செல்வம். தமிழினத்தை ஒற்றுமைப்படுத்த அவர் பெரும் முயற்சிஎடுத்தார். தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவங்கள்பற்றிய் ஆணைக்குழு நியமிக்க அரும்பாடுபட்டார்.

### பாலமாக விளங்கினார்

தமிழர் ..... சிங்களவர்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த பலமுறை முயற்சித்து இருஇனங்களுக்கிடையில் பெரும்பாலமாக விளங்கினார். அவரது இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அமைச்சர் திரு. நிஜங்கா விஜயரத்ன அமரர் திருவின் மறைவோடு தமிழர்-சிங்களவர் பாலம் முறிந்துவிட்டதென்றார்.

தமிழாராய்ச்சிமாநாடு யாழ்நகரில் நடக்கவேண்டுமென கூறி எங்களுக்குப் பக்கபலமாக நின்றார். அவர் அமைச்சராக இருந்தபோது கிழக்கிலங்கை உள்ளூராட்சிமன்றங்களை முன்னேற்றினார், சீதன ஒழிப்பு, சாதிஒழிப்பில் பெரும் பங்கெடுத்தார்.

திருவாளர்கள் எஸ். தியாகராஜா, சோ. சீவரத்தினம், எஸ். கே. மகேந்திரன், எஸ். எஸ். எம். பாரதமுத்து, எஸ் சாம்பசிவம் ஆகியோரும் பேசினார்கள். (க-இ)


**ஹரன்** யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Burt Reynold
Sully Field in
SMOKEY AND THE BANDIT
action-comedy color


யாழ். பாடசாலைகள் வி. சங்கம் நடாத்தும்

# உதைபந்தாட்ட அரை இறுதிப் போட்டிகள் இன்று

(நிருபர் எம். ஜெகநாதன்)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. 1-ம் பிரிவு, 2-ம் பிரிவு, 3-ம் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடாததபபடும் இச் சுற்றுப்போட்டியின் கால் இறுதியாட்டங்கள் நேற்றுடன முற்றுப் பெற்றுள்ளன. அரையிறுதி ஆட்டங்கள் தொடர்ந்து வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

சுற்றுப் போட்டியின் முதற்சுற்று ஆட்டங்களைத் தவிர ஏனைய கால். அரை இறுதியாட்டங்கள் யாவும் நொக் அவுட் முறையில் நடாத்தப் பட்டுவருகிறது. இதுவரை நடைபெற்ற போட்டிகள் அனைத்தும் மானிப்பாய் இந்துக கல்லூரியிலும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலுமே நடைபெற்று வந்தன. எனினும் விக்ரோறியாக்கல்லூாயில் நடைபெறவிருந்த கால் இறுதிப் போட்டிகள் அனைத்தும் இறுதி நேரத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அரை இறுதிப்போட்டிகளும் தொடர்ந்து சாம்பியன் போட்டிகளும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலேயே இடம் பெறவிருககின்றன.

3-ம் பிரிவு சாம்பியன் போட்டிகள் 29-ம், 1-ம் திகதிகளிலும் 2-ம் பிரிவு சாம்பியன் போட்டி 30-ம் திகதியும் 1-ம் பிரிவு சாம்பியன் போட்டி அடுத்தமாதம் 7-ம் திகதியும் நடைபெறும்.

### இன்றைய போட்டிகள்

2-ம் பிரிவு அரை இறுதிப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து அராலி இந்துக்கலலூரி போட்டியிடும். 3-ம் பிரிவுப் போட்டியில் காரைநகர் இந்துக்கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம் போட்டியிடும்.

### கால் இறுதிப் போட்டிகள்

உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 1-ம், 2-ம், 3-ம் பிரிவுகளுக்கிடையிலான கால் இறுதிப் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

உரும்பராய் இந்துக் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 3-ம் பிரிவுப் போட்டியில் ஸ்கந்தவரோதயா 3-1 சோல்களால் வெற்றிபெற்றுள்ளது. மத்தியஸ்தராக கப்டன் என். சோமசுந்தரம் கடமையாற்றினார்.

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் காங்கேசன்துறை மகாவித்தியாலயத்தை 1-0 கோல்களால் தோற்கடித்தது. கப்டன் என். சோமசுந்தரம் மத்தியஸ்தம் வகித்தார். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகள் நொக் அவுட் முறையில் நடைபெற்றன.

காரைநகர் இந்துக்கல்லூரி மானிப்பாய் மெமோரியல் கல்லூரியை 2-1 சோல்களால் தோற்கடித்தது. மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கே. தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

2-ம் பிரிவுப் போட்டியில் உரும்பராய் இந்துக் கல்லூரியும் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரியும் மோதிக்கொண்டன இப்போட்டியில் இந்துக்கல்லூரி 4-1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஆர். மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

1-ம் பிரிவுப் போட்டியில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி 1-0 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது திரு. ஏ. கமலநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியை மற்றுமொரு போட்டியில் 4-0 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இப் போட்டிகள் நடைபெற்றன. (பலாலி நி. ஈ)

### 2-ம் பிரிவுப் போட்டி

2-ம் பிரிவுப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியும் மீண்டும் மோதிக்கொண்டன. இவற்றிற்கான போட்டியின் முதல்சுற்று யூனியன் கல்லூரி மைதானத்தில் முன்பு நடைபெற்று 1-0 கோல்களால் யூனியன் கல்லூரி வெற்றி பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட இப்பிரிவில் சம்பந்தப்பட்ட இவ்விரு கல்லூரிகளுக்கும் சமமான புள்ளிகள் கிடைக்கப் பெற்றதாலேயே மீளவும் போட்டி நடைபெறவேண்டியதாயிற்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் மீண்டும் நடைபெற்ற இப்போட்டியில் மகாஜனக்கல்லூரி 1-0 கோல்களால் வெற்றிபெற்று கால் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இருமுறை

(2ம் பக்கம் பார்க்க)


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
**ஞானக்குழந்தை**

2-வது வார
**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
**அந்தமான் காதலி**
(கலர்-புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 2வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மக்கள் கலைஞர் ★ ஜெய்சங்கர் ★ சீமா ★ புன்னகை அரசி கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி பத்மினி ★ வி. கே. ராமசாமி ★ மனோரமா
விதுபாலா ★ ரீனு ★ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆலபரட் ★ மார்ஷல் மற்றும் பலர் ஜொலிக்கும்
**ஒரே வானம் ஒரே பூமி**
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறு விறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப் படத்திலும் காணக்கிடைக்காத பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிஸ்கா ரேடியோ அன் ரூ.வி

டெக்னீஷியன்ஸ் பஸ்நிலையம் எதிர்மேல்மாடி
உங்கள்
ரேடியோக்கள்
டேப்ரெக்கோடர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவானாலும்
உடன்சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

## செபமாலை ஆராதனை

(வேலணை)

வேலணைசாட்டி புனித சிந்தாத்திரை மாதா தேவாலயத்திலே மாதந்தோறும் இரண்டாம் சனிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கு செபமாலை ஆராதனையும், திருப்பலியும் நடைபெற்று வருகின்றன. இவ்வாராதனை அடுத்த மாதம் 13 ம் திகதி பங்குத் தந்தை அருட்திரு. ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (ஈ)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமான
துரித சேவை
யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியத்துக்கு ஏற்ற வகையில் அமைப்பையும் பண்பையும் வழங்கும்
குளிரூட்டப்பட்ட சேவை
வாசன்ஸ சுப்பர் ரவல் சேவை
ஆசனப்பதிவு:
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8095

# எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் மீது தாக்கு!

## நால்வர்மீது இன்று வழக்கு விசாரணை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் திரு. ஆர். பேரின்பநாயகத்தை அவரது வாசஸ்தலத்தில் வைத்து தாக்கியதாகவும் அவதூறான வார்த்தைகளால் ஏசியதாகவும் புறக்கோட்டைப் பொலிசாரால் நால்வருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு இன்று கொழும்பு பிரதம மஜிஸ்ரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் செயலாளரான திரு. பேரின்பநாயகத்தை கொழும்பு செட்டித் தெருவிலுள்ள அவரதுவாசஸ்தலத்தில் இம்மாதம் 4-ந் தேதி இரவு 10 மணியளவில் அத்துமீறிப் புகுந்த ஐவர் திரு. பேரின்பநாயகத்தை தகாதவார்த்தைகளால் ஏசியதாகவும், அவர்அணிந்திருந்த ஷேட்டை இழுத்துக்கிழித்ததாகவும் அவரைத் தாக்கியதாகவும் புறக்கோட்டைப் பொலிசில் திரு. பேரின்பநாயகம் கொடுத்த வாக்கு மூலத்தின் மீது பொலிசார் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

. தாக்கிவிட்டு வெளியேறிய இவர்களில் மூவர் உடனடியாகவே அவசரசேவைப் பொலிசாரினால் மைலன் தியேட்டர் அருகாமையில் வைத்து கைது செய்யப்பட்டனர். நாலாமவர் அன்று நள்ளிரவு அவரது வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டார் இவர்கள் அனைவரும் மதுபோதையில் காணப்பட்டதாக சட்டவைத்திய அதிகாரி தெரிவித்ததைத் தொடர்ந்து இவர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டு மறுநாள் கொழும்பு பிரதம மஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர் மஜிஸ்ரேட் இவர்கள் நால்வரையும் பிணையில் விடுதலை செய்தார்.

இந்நால்வரில் ஒருவர் துப்பறியும் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்; ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் எழுதுவினைஞர்; ஒருவர் தேசிய சுவடிகள் திணைக்கள ஊழியர்; மற்றையவர் பத்திரிகை நிறுவனம் ஒன்றைச் சார்ந்தவராவர்.

இதேவேளை தலைமறைவாகிவிட்ட 5-ம் நபரை தேடிப்பிடிப்பதற்கும் மஜிஸ்ரேட் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்நபர் லண்டனில வசிப்பவர் என்றும் அண்மையில்தான் இலங்கை வந்த இவர் தாடி வைத்திருந்தாரென்றும் கூறப்படுகிறது பொலிசார் இவரைத் தேடிவருகின்றனர் இதேவேளை சந்தேகநபர்களில் ஒருவரான துப்பறியும் பொலிஸ்பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் தவராஜா என்பவர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் (ம)

## சீன—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கொண்டனர்.

பத்திரிகையாளர் சந்திப்பிற்கானஏற்பாடுகளை யாழ்.அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கொண்டார்.

தலைநகருக்கு வெளியிலிருந்து வெளிவரும் ஒரே தினசரி 'ஈழநாடு' பத்திரிகைதான் என்றும் இப்பத்திரிகை தமிழ் மக்கள் கூடுதலாக வாழுகின்ற யாழ்ப்பாணத்தில் 1958-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றும் அறிமுகம்செய்துவைத்த யாழ். அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி இப்பத்திரிகை தமிழ் மக்களுக்குக் கூடுதலான சேவையை ஆற்றிவருகிறதென்றும், உலகில் தமிழ் மக்கள் வாழ்கின்ற பல நாடுகளுக்கும் 'ஈழநாடு' பத்திரிகை அனுப்பப்படுவதாகவும் திரு. யோகேந்திரா துரைசுவாமி 'ஈழநாடு' பத்திரிகை பற்றி சீனப்பத்திரிகையாளர் குழுவிடம் தெரிவித்தார்.

மேற்படி பத்திரிகையாளர் குழுவின் தலைவர் திரு ஜிடிங்கன்; 'ஈழநாடு' பத்திரிகை பற்றி அறிவதற்காக துருவித் துருவிப் பல கேள்விகளைக் கேட்டறிந்துகொண்டார்.

(கலந்துரையாடல் விபரம் நாளை வரும்.) (சொ)

## 'அலையரசி' கட்டணத்தில் மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் விலையேற்றத்தினால் அரசாங்கம் போக்குவரத்துச் சேவைகளின் கட்டணங்களை அதிகரித்த போதிலும் ஊர்காவற்றுறை - அனலைதீவு அரசு படகுச் சேவைக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை,

தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் 'அலையரசி' படகுச் சேவையில் பிரயாணியொருவரிடம் ஐம்பது சதம் மட்டுமே கட்டணமாக அறவிடப்படுகின்றது. இதேவேளையில் தனியார் சேவையில் பிரயாணியொருவரிடம் இரண்டு ரூபா அறவிடப்படுகிறது.

## இன்று வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

தென்கிழக்காசியப் பிராந்திய கூட்டுறவு ஒன்றிய நெறியாளர் திரு ஆர். பி. ராஜகுரு, மகளிர் கல்வித்திட்டப் பணிப்பாளர் செல்வி ஜெயந்தா தென்னக்கோன் ஆகியோருக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இன்று மாலை வரவேற்பளிக்கவுள்ளது

இவ்வரவேற்புக் கூட்டத்துக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மகளிர் குழுத் தலைவி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமைதாங்குவார். (வெ)

## “ரியூட்டரிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படவேண்டும்”

(புலோலி)

“மாணவர்களின் திறமைகள் வெளிக்கொண்டு வரப்படுவதனால் அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு மேலும் அவர்களது திறமைகள் சிறப்புற வழியேற்படும். மாணவர்களின் ஆக்கமுயற்சி வெளிப்பாடு அவர்களது திறமையை மட்டும் வெளிப்படுத்துமென்று கருதக்கூடாது. அவர்கள் கற்கும் பாடசாலைகளின் முன்னேற்றத்தையும் வெளிக்காட்டும்.”

இவ்வாறு வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை பெற்றோர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. கே. சுரபாதம் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு.எஸ். கணேசமூர்த்தி தலைமையில் இவ்விழா நடைபெற்றது

பருத்தித்துறை இ. போ. ச. சாலை அத்தியட்சகர் திரு. வே. ஸ்ரீஸ்கந்தராசா உரையாற்றுகையில் ரியூட்டரிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதை மாணவர்கள் விலக்கிக் கொள்ளவேண்டும். ரியூட்டரிகள் மாணவர்களின் பாடசாலைக் கல்வித்தரத்தை பாதிக்கின்றன. இதனைக் கருத்திற் கொண்டு மாணவர்களும் பெற்றோரும் செயற்பட வேண்டும். ரியூட்டரிகளுக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டியதும் முக்கியம் என்றார்.

பாடசாலை ஸ்தாபகரான திரு. சி. குழந்தைவேலுவட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. கே. சுரபாதத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (அ)

## திருமதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சபை கூடும்போது பொத்துவில் தொகுதி இரண்டாம் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ரங்கநாயகி பத்மநாதனும், மாவனல்ல தொகுதி உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள திரு. சந்திரதாச ரணதுங்காவும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ. தே. கவுக்குரிய இவ்வாசனங்களுக்கு கடந்தவாரம் கூடிய ஐ. தே. க. செயற்குழு இவர்களைத் தெரிவுசெய்திருந்தது தெரிந்ததே

## சிகரட்வான்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பளவுப் பிரதிநிதி தர்மகுலசிங்கம் ஆகியஇருவரும் அடையாளம் காட்டினர்.

## மகஜர்

(வேலணை)

வேலணை தெற்கு பனம்பொருள் உற்பத்திவிற்பனவு கூட்டுறவு சங்க நிர்வாகத்தை கலைத்து விட்டு புதிய நிர்வாகம் ஒன்றை நியமிக்குமாறுவேலணை மேற்கு ஐக்கிய விடுதலை முன்னணியினர் நிதி அமைச்சருக்கு மகஜர் ஒன்று அனுப்பியுள்ளனர். (ஈ)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
மகத்தான அழகிய தயாரிப்புக்களான
P. B. D. இண்டஸ்ரீஸ், லலிதகலா, சித்திரகலா, சுமாட்கவுஸ், சோபா இண்டஸ்ரீஸ், சல்மல் இண்டஸ்ரீஸ், சிலோன்பிக்ரோறியல், ஸ்ரீகலாஸ், சவனி இண்டஸ்ரீஸ், பென்பிறன்ஸ், ராஜம், சுஜிகலா ஆகியோரின் தயாரிப்புக்களும்
மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட புதிய பல ரக டிசைன் வாழ்த்துக்களும் கைவசம் உள்ளது.
சாம்பிள் செற் 50/- V. P. P. உண்டு
வியாபாரிகளுக்கு விசேட கழிவு.
மலிவு விலையில் நேரில் தெரிவு செய்தல் விரும்பத்தக்கது.
வடபகுதியின் ஏக விநியோகஸ்தர்கள்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 7631 தந்தி: "Bocks"

நன்றி நவிலல்
அமரர் ஆறுமுகம் கந்தசாமி
(பங்காளர் அ ச ஆறுமுகம் அன் சன்ஸ் ஊர்காவற்றுறை)
அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் தந்தி தபால் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பிய அன்பர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான ஆழ்ந்த நன்றியைப்பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.
தனித்தனியாக எங்கள் நன்றியைச் சமர்ப்பிக்கமுடியாமைக்கு வருந்தி மன்னிப்புக்கோருகின்றோம்.
இங்ஙனம்
அ. ச. ஆறுமுகமும் பாரியாரும்,
திருமதி கந்தசாமியும், பிள்ளைகளும்,
சகோதரங்களும்.
களபூமி, காரைநகர்.
7418

முதலாண்டு நினைவாஞ்சலி
வேலணை கிழக்கு
அமரர் க. பொ. நமசிவாயம்
தோற்றம்: 11-3-1931 மறைவு: 17-11-80

எமது அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று கடந்தாலும் தாங்கள் எம்மீது காட்டிய பாசமும் ஆதரவும் என்றும் எமது நெஞ்சைவிட்டகலா.
தங்கள் ஆன்மா பரிபூரண சாந்தியில் திளைக்கப் பிரார்த்திக்கின்றோம்.
(சிரார்த்த திதி: 25-11-80)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரிகள்.
வேலணை-3.
7432

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வில் ... அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper ... 1980-ம் ஆண்டு ... நவம்பர் 25-ம் திகதி
Gazette Eelanaadu, Phone, 389. ... No 49.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org